Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 03 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 15 (18.11.2005) வெள்ளிக்கிழமை இதழ் 49



அசல் 22 கரட் தங்க நகைகளையும், ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள

கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

T.P. : 021 222 5987

# தமிழர் தாயகப் பகுதியெங்கும் தேர்தல் முற்றாக புறக்கணிப்பு!


யாழ்ப்பாணம் —

ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நேற்று நடைபெற்ற தேர்தலை - தமிழர்தாயகப் பகுதிகளில்உள்ளவாக்காளர்கள் முழுமையாகப் புறக்கணித்து சிங்களத் தலைமைகள் மீதான தமது நம்பிக்கையீனத்தை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தினர்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே மிகக் குறைவான வாக்குகள் பதிவான இந்தத் தேர்தலில் - யாழ். தேர்தல் மாவட்டத்தில் 1 வீதத்துக்கும் குறைவான வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தனர்.

இதன் மூலம் 99 வீதமான யாழ். குடாநாட்டு மக்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணித்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னணியில் மகிந்த!



கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் வெளியிடப்பட்ட முதற்கட்ட பெறுபேறுகளில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே முன்னிலையில் இருப்பதாக தேர்தல் செயலகம் இன்று அதிகாலை 5 மணியளவில் வெளியிட்ட உத்தியோகபூர்வ முடிவுகளிலிருந்து தெரிய வருகிறது.

தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணும்பணி மாலை 5 மணிக்குப் பின்னர் ஆரம்பமாகி நேற்று இரவு 9.30 மணியளவில் தபால் மூலமான முதல் தபால் வாக்குமுடிவு வெளியிடப்பட்டது. இந்த முடிவுகளின் அடிப்படையில் 50 வீதத்துக்கும் சற்று அதிகமான வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளார்.

## இன்று அதிகாலை வரை கிடைத்த முன்னணி பெறுபேறுகள்

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இன்று அதிகாலை 5 மணியளவில் கிடைத்த இறுதிக்கட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் பிரதான வேட் பாளர்கள் பெற்ற மொத்த வாக்குகளின் விபரம் வருமாறு –

| | | |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | – 772969 | – 50.91% |
| ரணில் விக்கிரமசிங்க | – 725935 | – 47.81% |
| ஏனையோர் | – 19363 | –1.28% |
| செல்லுபடியானவை | – 1518267 | |

முன்னணி - 47034

# இலங்கைத் தேர்தல் வரலாற்றிலே சாதனை படைத்தது யாழ்ப்பாணம்!

யாழ்ப்பாணம் —

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், யாழ்.குடாநாட்டில் வாக்களிப்பு வீதம் வரலாற்றிலேயே மிகவும் குறைந்தளவில் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் ஒரு வீதத்தினருக்கும் குறைவானோரே வாக்களித்துள்ளனர். நேற்றைய தினம் யாழ்.குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு, வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி மிகவும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி அமைக்கப்பட்ட பல வாக்களிப்பு நிலையங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு நேற்றுக்காலை வாக்களிப்புக்குத் திறக்கப்பட்டபோதிலும், வாக்காளர்கள் எவரும் வாக்களிக்கச் செல்லாததால் வாக்களிப்பு நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

நேற்றைய தினம் கள்ள வாக்குகளைப் போடுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திற்கு கள்ள வாக்கு அளிப்பதற்காக பொலிஸாரின் பாதுகாப்புடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஓமந்தை - சோதனைச்சாவடி முன் ரணில், மகிந்த படங்கள் எரிப்பு!



வவுனியா —

ஓமந்தை - விளக்குவைத்த குளம் படையினரின் இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்பாக நூற்றுக் கணக்கான வன்னி பிரதேச வாக்காளர்கள் - பிரதமர் மகிந்த, ரணில் ஆகியோரின் உருவப் படங்களையும், வாக்காளர் அட்டைகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

மேலும் நேற்று ஜனாதிபதித் தேர்தலை முற்றாகப் புறக்கணித்த வன்னிப் பிரதேச வாக்காளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு விளக்குவைத்தகுளம் சோதனைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகள்

**வன்னி - முல்லைத்தீவு**

| | | |
|---|---|---|
| மஹிந்த | - 510 | - 57.24% |
| ரணில் | - 372 | - 41.75% |
| மொத்த வாக்குகள் | | - 902 |
| செல்லுபடியானவை | | - 891 |
| பதிவுசெய்யப்பட்டவை | | - 66596 |

**வன்னி - மன்னார்**

| | | |
|---|---|---|
| மஹிந்த | - 2183 | - 9.46% |
| ரணில் | - 20463 | - 88.72% |
| மொத்த வாக்குகள் | | -23426 |
| செல்லுபடியானவை | | - 23065 |
| பதிவுசெய்யப்பட்டவை | | - 78906 |

**பதுளை - பதுளை**

| | | |
|---|---|---|
| மஹிந்த | - 17494 | - 47.77% |
| ரணில் | - 18624 | - 50.85% |
| மொத்த வாக்குகள் | | - 37135 |
| செல்லுபடியானவை | | - 36623 |
| பதிவுசெய்யப்பட்டவை | | - 48670 |

**பதுளை - ஹாலி - எல**

| | | |
|---|---|---|
| மஹிந்த | - 19946 | - 44.81% |
| ரணில் | - 23638 | - 53.11% |
| மொத்த வாக்குகள் | | - 45296 |
| செல்லுபடியானவை | | - 44511 |
| பதிவுசெய்யப்பட்டவை | | - 57900 |

**யாழ்ப்பாணம் - சாவகச்சேரி**

| | | |
|---|---|---|
| மஹிந்த | - 10 | - 20.00% |
| ரணில் | - 33 | - 66.00% |
| மொத்த வாக்குகள் | | - 53 |
| செல்லுபடியானவை | | - 50 |
| பதிவுசெய்யப்பட்டவை | | -62022 |

**யாழ்ப்பாணம் - மானிப்பாய்**

| | | |
|---|---|---|
| மஹிந்த | - 64 | - 18.82% |
| ரணில் | - 256 | - 75.29% |
| மொத்த வாக்குகள் | | - 357 |
| செல்லுபடியானவை | | - 340 |
| பதிவுசெய்யப்பட்டவை | | -68783 |

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் ஓரிரண்டு வாக்குகளே பதிவாகியுள்ளன!

கொழும்பு —

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் நேற்றைய தேர்தலில் இருந்து முற்று முழுதாக ஒதுங்கியிருந்ததைக் காணமுடிந்தது.

புலிகளின் பகுதிகளிலிருந்து இராணுவ முன்னணி காவலரண்களுக்கு அப்பால் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

ஆயினும் எவருமே இந்தப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தாது குறிப்பிட்ட இடங்களில் தரித்து நின்ற பஸ்கள் திரும்பிச் சென்றன.

குறிப்பாக முகமாலை கொத்தணி வாக்குச் சாவடியில் ஓரேயொரு வாக்கு மட்டுமே பதிவானதாகத் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதியில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்குச் சாவடியில் 336 பேர் தமது வாக் கினை அளித்துள்ளனர்.

மண்முனைத்துறை கொத்தணி வாக்குச் சாவடியில் 10 பேர் மட்டுமே வாக்களித்தனர். இந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஒருவரும், திருகோணமலை மகிந்தபுரவில் ஐவரும், மூதூரில் ஒருவருமே கொத்தணி வாக்குச் சாவடிகளில் தமது வாக்குகளைச் செலுத்தியிருந்தனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் என விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**இன்று மாலை தேர்தல் முடிவுகளுடன் நமது ஈழநாடு விசேட பதிப்பு வெளியாகும்**

# திருமலையில் குவிக்கப்பட்ட படையினர் நேற்று தற்காலிகமாக விலக்கப்பட்டனர்!

திருகோணமலை—

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு திருகோணமலை நகரில் குவிக்கப்பட்டிருந்த இராணுவ மற்றும் கடற்படையினர் நேற்றுக் காலை தற்காலிகமாக விலக்கிக்கொள்ளப்பட்டனர்.

சட்டவிரோத புத்தர் சிலையை திருமலையில் சிங்களவர்கள் நிறுவியதைத் தொடர்ந்து, பாடசாலைகள் அருகாமையிலும், சந்திகளிலும் ஏராளமான இராணுவத்தினரும் கடற்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த மேலதிக இராணுவக் குவிப்பை விலக்கக் கோரி தமிழ் மக்கள் பாரிய போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று தேர்தல் நடைபெறுவதால் வாக்களிப்பு நிலையங்களிலிருந்து 500 மீற்றருக்குள் எதுவித பாதுகாப்பும் இருக்கக்கூடாது என்ற தேர்தல் விதிகளுக்கமைய நேற்றுக்காலை தற்காலிகமாக படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டனர்.

இருந்தபோதும், சோதனைச் சாவடிகள் மற்றும் சந்திப் பகுதிகளில் மணல் மூட்டைகளை அடுக்கி படையினரும் பொலிஸாரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

எனினும் சர்ச்சைக்குரிய புத்தர் சிலையைச் சுற்றிய தமது நிலைகளை இராணுவத்தினர் விலக்கிக் கொள்ளவில்லை.

இதனிடையே திருகோணமலை – அனுராதபுரம் சந்தியில் மொரவெவ சோதனைச் சாவடி மீது நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதாக கடற்படையினர் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

## மட்டு – களுவன்கேணியில் கடத்தப்பட்ட உப தபாலதிபர் வெட்டிக் கொல்லப்பட்டார்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவன்கேணி உப தபால் அதிபர் கோமதி வீரபத்திரர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

கடமை முடிந்து நேற்றுமுன்தினம் மாலை வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இவரது சடலம் ஆள் நடமாட்டமற்ற பகுதியில் நேற்றுக்காலை பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## மட்டு.அரசியல்துறைப் பொறுப்பாளரை கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்திப்பு



மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையனுக்கும், மட்டக்களப்பு மாவட்ட புதிய கண்காணிப்புக்குழுத் தலைவர் லெய்வ்வின்சன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பானது புதிய கண்காணிப்புக்குழுத் தலைவருடன் எதிர்காலத்தில் இணைந்து செயல்படுவது தொடர்பான சிநேகபூர்வமான சந்திப்பாகவே இடம்பெற்றது.

## வெளிநாட்டுக்கு ஓடினாரா சோமவன்ச? ஊடகச் செய்திகளை அவரே நிராகரிப்பு!


கொழும்பு—

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நேற்றுமுன்தினம் பிற்பகல் அவசரமாக லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றதாக நேற்று செய்திகள் வெளியாகிருந்தபோதும், அவர் சார்பில் நேற்று மறுப்பு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சோமவன்ச அமரசிங்க அவசரமாகப் புறப்பட்டுச் சென்றதாகவும் - இவர் யு.எஸ்.503 ரக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் புறப்பட்டுச் சென்றமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகப் பெரும் பிரசாரத்தில் ஈடுபட்ட இவர், இராணுவம் தொடர்பாகச் சர்ச்சைக்குரிய கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார். தேர்தலுக்கு முதல் நாளே சோமவன்ச நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

மகிந்தவின் தேர்தல் வெற்றிமீது அவநம்பிக்கை கொண்டே இவர் நாட்டைவிட்டு தப்பிச்சென்றதாக செய்திகள் வெளியானபோதும், நேற்று வெளியிட்ட அறிக்கையில் சோமவன்ச இதை மறுத்துள்ளார்.



தான் இந்தத் தருணத்தில் நாட்டை விட்டுத் தப்பியோடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் இளைஞர் இருவர் கைது

கொழும்பு—

ஏறாவூரில் இரு தமிழ் இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாரின் வாகனம் மீது நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு, இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிக்க முயன்றபோது கைதுசெய்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த இளைஞர்கள் வீசியதாகக் கூறப்படும் கைக்குண்டும் வெடிக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பேரின்பராஜ் மதிவாணன் (வயது 19), தம்பிவேலு சசிக்குமார் (வயது 23) ஆகிய இளைஞர்கள் மேலதிக விசாரணைக்காக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தேர்தல் புறக்கணிப்பால் பங்குச் சந்தை வீழ்ச்சி!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்ததால் கொழும்பு பங்குச் சந்தை சரிவடைந்துள்ளது.

அனைத்து பங்கு வர்த்தகத்தின் சுட்டெண் 41 புள்ளிகள் வீழ்ச்சியடைந்தன. இது நேற்றுமுன்தினம் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் 1.65 வீதம் வீழ்ச்சியாகும்.

மிலிந்த பங்கு வர்த்தகத்தில் சுட்டெண் 77 புள்ளிகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இது 2.31 வீதமான வீழ்ச்சியாகும்.

கடந்த 10 ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எதுவித அக்கறையும் செலுத்த வேண்டியதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறிவித்திருந்த போதும் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## றொனாடோ தீச்சுழலே புத்தளம் கடலில் வீழ்ந்தது!

### கடற்படை அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு—

கற்பிட்டி நுரைச்சோலை கடற்பரப்பில் கடந்த செவ்வாயன்று எரிந்து விழுந்தது விமானம் அல்ல என்றும், றொனாடோ எனும் தீச்சுழலே அந்தக் கடற்பரப்பில் வீழ்ந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கற்பிட்டி கடற்பரப்பில் தீப்பந்தொன்று வந்து விழுந்ததாக இரு மீனவர்கள் தெரிவித்ததையடுத்து ரோலர் படகுகளில் அந்தப் பகுதிக்குச் சென்ற கடற்படையினர் சோதனைகளை நடத்தினர்.

சம்பவம் நடந்த இடத்தில் எந்தவித எண்ணெய்ப் படலமும் காணப்படவில்லை. விமானமோ, ஹெலிகொப்டரோ விபத்தில் சிக்கியிருந்தால் அந்த இடத்தில் எண்ணெய்ப் படலம் காணப்பட்டிருக்கும் என்றும் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எனினும் கடற்படையினரும் விமானப் படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட புலிகளின் வித்துடல்கள் விதைப்பு!

கொழும்பு—

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்புப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இரு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் வித்துடல்கள் நேற்று முன்தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் வழித்துணையுடன் கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்துக்குக் கொண்டு வரப்பட்டு, நேற்றுக்காலை மக்களின் அஞ்சலிக்காக முதலைக்குடா பாடசாலையில் வைக்கப்பட்டது.

பின்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடன் வாழைச்சேனையைச் சேர்ந்த கப்டன் வெள்ளையன் என்பவரின் வித்துடல் வாழைச்சேனையிலுள்ள அன்னாரின் உறவினர் வீட்டுக்கும், விநாயகபுரத்தைச் சேர்ந்த லெப். கேணல் சுரேஸ் என்பவரின் வித்துடல் விநாயகபுரத்திலுள்ள அன்னாரின் உறவினர் வீட்டுக்கும் கொண்டு செல்லப்பட்ட பின்னர் வித்துடல்கள் நேற்று மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைகுழிகளில் விதைக்கப்பட்டன.



தேர்தலுக்குப் பின்னர் கொழும்பு நகரில் பொலிஸார் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கின்றனர்.



தேர்தல் முழந்ததும் மட்டக்களப்பில் பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸார்.

## தப்பமுயன்ற பிரெஞ்சு கைதிமீது வெலிக்கடையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு—

வெலிக்கடை சிறையிலிருந்து தப்ப முயன்றதாக பிரெஞ்சு கைதி மீது சிறைச்சாலை அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

கடந்தவாரம் இலங்கைக்கு வந்த அந்த பிரெஞ்சு நாட்டவர் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டதாகத் தெரிவித்து கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவரை அங்கோடை மனநிலை மருத்துவமனையில் அனுமதித்த அதிகாரிகள் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றினர்.

சிறைச்சாலையின் சுவரின் மீது ஏறி அந்த நபர் தப்பி ஓட முயன்றதாகவும், அவரைப் பிடிக்கச் சென்ற அதிகாரிகளை தாக்கியதாகவும் சரணடைய மறுத்ததால் அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## 63 வாக்குச் சீட்டுக்களுடன் 6 பேர் பொலிஸாரால் கைது!

வவுனியா—

வவுனியாவில் 63 வாக்குச் சீட்டுக்களை வைத்திருந்த ஆறு பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

வெள்ளை நிற டொல்பின் வாகனம் ஒன்றைச் சோதனையிட்டபோதே அதில் 63 வாக்குச் சீட்டுக்கள் இருந்தபோது அவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர். அத்துடன் அந்த வாகனத்தில் இருந்த 6 பேரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் கள்ள வாக்குப் போடும் நோக்கில் சென்று கொண்டிருந்தனர் என்றும், இவர்களை நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோது நீதிபதி இவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

கைதானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் எனத் தெரியவருகிறது. (03)

## பதின்மூன்று இராணுவக் கைதிகள் தடுப்பு முகாமிலிருந்து தப்பினர்!

கொழும்பு—

குருநாகலில் போயகலவில் அமைந்துள்ள இராணுவத் தடுப்பு முகாமில் இருந்து 13 இராணுவச் சிறைக்கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த இராணுவத் தடுப்பு முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளை அச்சுறுத்திவிட்டு, 13 கைதிகளும் தப்பிச்சென்று விட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதானகே தெரிவித்தார்.

தப்பிச் சென்றவர்களில் ஒரு இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜே.வி.பி. எம்.பி. மானகே மீது மகிந்த விஜேசேகர தாக்குதல்!

கொழும்பு—

காலியிலுள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவமொன்றில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிறேமசிறி மானகே காயமடைந்தார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர தனது ஆதரவாளர்கள் 150 பேருடன் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பு செயற்பாட்டை குழப்பியதாகவும் வாக்களிக்க வந்தவர்கள் இவரது இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வன்முறைச் சம்பவங்களை தீர்த்துவைக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது மகிந்த விஜேசேகரவும் அவரது ஆதரவாளர்களும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிறேமசிறி மானகேயை தாக்கி காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் புறக்கணிப்பில் தமிழர் தாயகம்!

## மட்டக்களப்பில்




களுவங்கேணியில்



வவுணதீவில்




வாழைச்சேனையில்

## வவுனியாவில்





விளக்குவைத்த குளத்தில் மக்களால் எரிக்கப்படும் வாக்குச் சீட்டுக்கள்



ஓமந்தை கொத்தணி வாக்குச்சாவடி

## முகமாலையில்







வாக்களிக்கும் மக்கள் எவருமற்று முகமாலை வாக்குச்சாவடிகள்

## யாழ்ப்பாணத்தில்



கண்காணிப்பாளர்கள் மட்டும்...



கஸ்தூரியார் வீதி




நடைபாதை வியாபாரிகள் பகுதி



வெறிச்சோடிய சாவகச்சேரி வீதி




ஆளரவமற்ற கைதடி



கொடிகாமம் சந்தி

# ஆரம்ப வீரர்களின் மோசமான ஆட்டமே இந்திய அணியின் தோல்விக்கு காரணம்

## ராகுல் ராவிட் தெரிவிப்பு



ஹைதராபாத் —

தொடக்க வீரர்களின் மோசமான ஆட்டமே இந்திய அணியின் தோல்விக்குக் காரணம் என்று கப்டன் ராவிட் கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்விகண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடுத்தாடிய இந்திய அணி 5 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது.

தோல்வி குறித்து இந்திய அணி கப்டன் ராவிட் கூறியதாவது -

ஆடுகளங்கள் பந்துவீச்சாளர்களுக்கு சற்று சாதகமாக இருந்தது. தொடக்க ஆட்டக்காரர்கள் அடுத்தடுத்து மோசமாக வீழ்ந்ததுதான் தோல்விக்குக் காரணம். யுவராஜ்சிங் ஆட்டம் அழகாக இருந்தது. 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பு என்ற சரிவிலிருந்து மீண்டுவந்தது சிறப்பானதாகும் எனத் தெரிவித்தார்.

# இந்திய அணியின் முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தியதே தமது வெற்றிக்கு காரணமாம்!

## தென்னாபிரிக்க அணித்தலைவர் தெரிவிப்பு



ஹைதராபாத் —

முதல் 15 ஓவர்களிலேயே இந்திய அணியின் முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டுமென்று திட்டமிட்டோம். அதை தமது வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செய்து முடித்ததாலேயே தம்மால் வெற்றிபெற முடிந்ததென - இந்திய அணியுடனான வெற்றி குறித்து தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவித்துள்ளார். இந்த வெற்றி குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியாவுடனான முதல் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் நல்ல தொடக்கத்தைப் பெற்றுள்ளோம். அவுஸ்ரேலியா 21 போட்டிகளில் தொடர்ந்து வெற்றிபெற்று சாதனை ஏற்படுத்தியிருப்பதை முறியடிப்பது கூட முக்கியமல்ல. அதைவிட இந்த தொடரை வெல்லவேண்டுமென்பதே முக்கியமானதாகும்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வுசெய்வதில் ஆபத்து இருப்பதாக கருதினேன். எமது வீரர்கள்கூட துடுப்பாட்டத்தையே விரும்பினார். ஆனால் நான் பந்துவீச்சை தேர்வு செய்தேன். அது நன்றாக அமைந்து விட்டது.

இலங்கையை, இந்தியா வீழ்த்தியதன்மூலம், நாம் இந்திய அணியை எவ்வாறு வீழ்த்தவேண்டுமென திட்டம் வகுத்தோம். இந்திய அணியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற வெறியுடனும் ஆடியதால் வெற்றி பெற்றோம்.

இந்திய அணி டோனியை மிகவும் நம்பியிருந்தது. அவர் வேகப்பந்துகளை அடித்து நொருக்கக்கூடியவர் எனவே நாமும் அச்சமடைந்தோம். ஆனால் அவரை வந்த வேகத்திலேயே திருப்பியனுப்பினோம். டோனி வீழந்ததன் மூலம்தான் எமக்கு வெற்றிகிடைத்தது.

காலைவேளை பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர். கடைசிக்கட்ட பந்துவீச்சில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். துடுப்பாட்டம் எதிர்பார்த்தபடி அமையவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### வீடு தேவை

கல்வியங்காடு கட்டப்பிராய் ஆகிய இடங்களில் வீடு விலைக்கு தேவை - தரகர்கள் தேவையில்லை. தொடர்புகளுக்கு: இ.கலைச்செல்வன், விபுஷா இல்லம், திருமகள் சோதி வீதி, நெல்லியடி. (2112)


## அவுஸ்ரேலியாவுடனான 2 ஆவது டெஸ்ட்

# மேற்கிந்தியா முதல் இனிங்ஸில் 149 ஓட்டங்களுக்குள் சுருண்டது!

ஹொபாட் —

அவுஸ்ரேலிய - மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடை யில் ஹொபாட்டில் நேற்று முன்தினம் தொடங்கிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி அவுஸ்ரேலிய வீரர்களின் பந்துவீச்சிற்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 149 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணியின் கைல் மற்றும் சிமித் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். இதில் அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் சிமித் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சர்வான் வந்தார். ஆனால் அவரும் 23 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்





றிருக்கையில் ஆட்டமிழந்தார். இதன் பின் பெரும் எதிர்பார்ப்புடன் லாரா வந்தார். ஆனால் அணி 60 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அவரும் 46 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 13 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார்.

இவரையடுத்து கைலுடன் அணித்தலைவர் சந்தர்போல் இணைந்தார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். ஆனால் அணி 119 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அடுத்தடுத்து இந்த இருவரது விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட்டது. முதலில் 102 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த சந்தர்போலும், இரண்டாவதாக 116 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த கைலும் ஆட்டமிழந்தனர்.

இவர்களின் பின்னர் வந்த எவருமே பெரிதாக சோபிக்காததால் மேற்கிந்திய அணி 68.3 ஓவர்களில் 149 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பின்னர் வந்த சாமுவேல் 5, பிராவோ 3, ராம்டீன் 2, பவல் 15, எட்வேட்ஸ் 0 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மக்ரா 4, லீ மற்றும் மக்கில் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ஹைடன் 31, ஹூசே 26 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.


# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

## 20 ஆவது ஆண்டு நிறைவு விழா!

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக மக்களின் விழிப்புணர்வு, அறிவு, சமூகப்பணி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. போட்டிகள் யாவும் அரசாங்க அதிபர்கள், திணைக்களங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடத்தும். போட்டிகளில் சிறந்த படைப்பாளிகளுக்கும், சிறப்பாகச் செயலாற்றிவரும் உள்ளூர் நிறுவனங்களுக்கும் தெரிவுக்குழுவின் முடிவின்படி பெறுமதிவாய்ந்த பல பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன

| இல | போட்டி நடைபெறும் மட்டங்கள் | போட்டி வகை |
|---|---|---|
| 01 | பல்கலைக்கழகங்கள் | ஆய்வுக்கட்டுரை |
| 02 | பாடசாலைகள் | ஓவியம், கட்டுரை |
| 03 | கிராமசேவகர் பிரிவுகள் | சிறந்த சமூகசேவையாளர் தெரிவு |
| 04 | வலயங்கள் | சிறந்த முன்பள்ளி தெரிவு |
| 05 | பிரதேச பிரிவுகள் | சுயமுயற்சியால் தற்காப்பு நிலையடைந்த சிறந்த வலுவிழந்தோர் தெரிவு |
| 06 | மாவட்டங்கள் | வீடியோ விபரண ஆவணம் தயாரித்தல், புகைப்படம் தயாரித்தல் |
| 07 | சிறுவர் இல்லங்கள் | அறிவுசார்ந்த போட்டிகள் |
| 08 | கிராமங்கள் | சிறந்த சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குழு தெரிவு |
| 09 | உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் | செயற்படுத்திவரும் சிறப்பான தொடர் திட்டத் தெரிவு |
| 10 | சிறுவர் இல்லங்கள் | சிறந்த சிறுவர் இல்லத் தெரிவு |
| 11 | நிறுவனங்கள் | சேவைக்கால நிலையிலான பணியாளர் தெரிவு |
| 12 | மாவட்டங்கள் | நவீன தொழில்நுட்ப பயன்பாடு |
| 13 | கடற்தொழில் பரிசோதகர்கள் | கடல் சார் போட்டிகள் |
| 14 | கிராமங்கள், மாவட்டங்கள் | கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள், ஏனைய விளையாட்டுப் போட்டிகள் |
| 15 | மாவட்டங்கள் | சிறந்த உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனம் தெரிவு |

போட்டிகள் நடத்தப்படும் காலம், ஏனைய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். எனினும் போட்டிகள் யாவும் 2006 ஆம் ஆண்டு தை மாதமளவில் முடிவுபெறும் என தமிழர் புனர்வாழ்வுக்கழக 20 ஆம் ஆண்டு நிறைவு விழா குழுவினர் தெரிவிக்கின்றனர். போட்டி நிபந்தனைகள் பற்றிய பூரண விபரங்கள் காலக்கிரமத்தில் பிரசுரிக்கப்படும்.

அதற்கு முன்பாக மேற்கூறப்பட்ட போட்டி நிகழ்வுகள் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.

திரு ச.இராஜகோபால்
இணைப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின்
20 ஆம் ஆண்டு நிறைவுவிழா
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

தொலைபேசி:- 021 228 5956
மின்னஞ்சல்:- rajagopal@yahoo.com
(சி-4833)



# நீங்காத நினைவில் மூன்றாமாண்டு

இவ்வுலகில் 15 10 1944

இறையுலகில் 18 11 2002



## அமரர் முருகேசு குணநாயகம்

(பிரபல ஆயுள்வேத வைத்தியர்) (சந்தம்புளியடி - காரைநகர்)

ஆண்டுகள் மூன்று ஓடிச்சென்றாலும்
அருகிலிருந்து வாழ்விக்கின்றீர்கள் அப்பா
வேண்டுதல் செய்து உங்களை வணங்கி வாழ்கின்றோம்
வேளைகளெல்லாம் வேண்டிய தந்து காக்கின்றீர்கள் அப்பா.

கோணாவளை லேன்.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.
(C/4832)

நீள நினைந்து வாழும்
உங்கள் மனைவி கு.றோசமலர்.
மகள் கு.கௌசிகா.
மகன் கு.ரவிசங்கர்.





# கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய வகுப்புக்களுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன.

## மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- கூந்தல் அலங்காரம்
- அடிப்படை Facial
- பூவேலை
- கை வேலை
- FABRIC வர்ணமிடல்

மற்றும் மணப்பெண் அலங்காரம்.

இத்துடன் 6 மாதகால தையல் பயிற்சிக்கும் அனுமதிகள் உண்டு.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப.2.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- பதிவாளர். (C/4831)

# ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்கவே குழந்தைகள்தினம் முன்னெடுக்கப்படுகிறது

## முன்பள்ளி இணைப்பாளர்

யாழ்ப்பாணம் —

சர்வதேச சிறுவர் தினமானது இந்த ஆண்டு அதாவது - 2005 முதல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்படுகிறது. அதுவும் இலங்கையில் இந்த நிகழ்வு வடக்கு - கிழக்குப் பகுதிகளிலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் பகுதியிலேயே முதன்முதலில் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுவது பெருமை தரும் விடயமாகுமென, மட்டுவில் சரசாலை முன்பள்ளிக் குடும்ப கட்டமைப்பு நடத்திய குழந்தைகள் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் இ.சிவதர்மிகா தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து பேசுகையில் -

இன்றைய குழந்தைகளே நாட்டின் நாளைய தலைவர்கள். எனவே, அவர்களை ஆளுமை மிக்கவர்களாக உருவாக்க வேண்டுமென்று எமது முன்பள்ளி நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜியினது கருத்துப்படி, நாம் இன்று இந்தக் குழந்தைகள் தின நிகழ்வை நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம். தேசியத் தலைவரது நெறிப் படுத்தலின் வழிகாட்டலில் -

முன்பள்ளியால் ஒன்றிணைந்து நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன் எமது முன்பள்ளி கல்வி மேம்பாட்டு பேரவை மிகவும் வறிய நிலையிலுள்ள மழலைச் சிறார்கள் 100 பேருக்குத் தலா 500 ரூபா வீதம் வைப்பிலிட 50 ஆயிரம் ரூபாவைத் திரட்டியுள்ளது.

இது எமது தேசியத் தலைவரது பிறந்த தினமான - எதிர் வரும் 26ஆம் திகதி கொடிகாமப் பிரதேசபை மண்டபத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்வில் வைத்து வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன், அன்றைய தினம் மீசாலை இராமாவில் கந்தசுவாமி ஆலய முன்றலில் 51 பானைகள் வைத்துப் பொங்கலிடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற அதிபர் நா.முத்துக்குமாரு தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கிராம அலுவலர் க.வாமதேவன், பொதுச் சுகாதார பரிசோதகர் இ.சிரேஷ்டகுமார், பாடசாலை அதிபர்கள் செ.சிவஞானம், செ. பேரின்பநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (24)



வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்திய வைத்திய சேவையின்போது பருத்தித்துறை பிரபல வர்த்தகர் எஸ்.பத்மநாதன் முதியவர் ஒருவருக்கு மூக்குக்கண்ணாடி அணிவதைப் படத்தில் காண்க. (17)

## போக்குவரத்து சிரமம்

யாழ்ப்பாணம் —

கோண்டாவில் கலைவாணி வீதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால், போக்குவரத்துச் செய்ய முடியாது இருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பருவமழைபெய்யத் தொடங்கி இருப்பதால், அந்த வீதியிலுள்ள பாரியகுழிஒன்றில் மழைநீர்தேங்கி நிற்பதால் பாதசாரிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த வீதியை அதிகளவு மக்கள் தினமும் பயன்படுத்தி வருகின்றபோதிலும், வீதியில் மழை வெள்ளம் தேங்கி இருப்பதால் போக்குவரத்துச் செய்யமுடியாது இருப்பதாக பாதசாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# சுனாமி மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளருக்கு பல்வேறு உதவிகள்

வடமராட்சி —

யுத்த நடவடிக்கைகளாலும், சுனாமி அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் - தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கடற்றொழில் அமைச்சு, மெதடிஸ்த திருச்சபையினாலும் படகுகள், இயந்திரங்கள், வலைகள் வழங்கப்பட்டு வருவதாக, கடற் தொழில் நீரியல் வளத்திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

போரால் பாதிக்கப்பட்ட தென்மராட்சியில் உள்ள கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு பகுதி மீனவ சமாசங்களைச் சேர்ந்த சுமார் முந்நூறு மீனவர்களுக்கு முதற்கட்டமாக வலை உபகரணங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்படவுள்ளது. கடற்தொழில் அமைச்சினால் வழங்கப்படவிருந்த இருபது படகுகள் மற்றும் இயந்திரங்களில் - பன்னிரண்டு படகுகளும், இயந்திரங்களும் வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதி எட்டுப் படகுகளும், இயந்திரங்களும், வடமராட்சி கிழக்கு கடற்தொழி லாளர் சமாசத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் விடுமுறைகள் முடிவடைந்தவுடன் இவை மருதங்கேணிப் பகுதி மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மெதடிஸ்த திருச்சபையால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படுவதற்காக கொண்டு வரப்பட்ட கடற்தொழில் சாதனங்களில் - 14 இயந்திரங்களும், பரீட்சார்த்தகமாக தும்புக்கண்ணடியிலான தெப்பைகளும், பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபைபங்குத்தந்தையுடன் கடற்தொழில் நீரியல் வலயத் திணைக் கழகத்தினரும், சமாசத்தினரும் இணைந்து வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவுப் பகுதியில் சிறுவர் பாதுகாப்பு அமைப்பால் மீனவர்களுக்கு குளிரூட்டப்பட்ட படகு ஒன்றும், கடலில் பிடிக்கப்படும் மீனைப் பாதுகாத்து விற்பனை செய்யும் நோக்குடன் மீன்களைப் பழுதடையாமல் பாதுகாக்கக்கூடிய வசதிகள் அடங்கிய அறையும் அமைத்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# வீட்டினுள் புகுந்து தாக்கிய கும்பல் அயலவர் உதவியுடன் மடக்கி பிடிப்பு

## புத்தூரில் சம்பவம்

புத்தூர் —

நேற்று முன்தினம் இரவு வேளை வீடு ஒன்றினுள் புகுந்து தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்று அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, கலாசாரம் பேணும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

புத்தூர் வடக்கில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த இந்தக் கும்பல் - வீட்டு யன்னல் கண்ணாடிகளை அடித்து நொருகியதுடன், வீட்டில் இருந்தவர்களையும் அடித்துக் காயப்படுத்திவிட்டுச் சொல்ல முற்பட்டவேளை, வீட்டிலிருந்தவர்கள் கூக்குரல் எழுப்பியதையடுத்து, அயலவர்களின் உதவியுடன் 7 இளைஞர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

இந்த இளைஞர் கும்பல் 7 மோட்டார் சைக்கிள்களில் - வாள், பொல்லுகள் என்பவற்றுடன் வந்து வீட்டில் இருந்தவர்களைத்தாக்கி வீட்டுப் பொருட்களையும் சேதமாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

கணவன் - மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக கணவர் தனது இரண்டு பிள்ளைகளுடன் புத்தூரில் உள்ள தாயாரின் வீட்டில் வசித்து வந்துள்ளார். மனைவிக்கு மிகவும் நெருக்கமானவர் ஒருவர் இந்த இளைஞர் கும்பலைப் பேரம்பேசி இரண்டு பிள்ளைகளையும் தந்தையிடம் இருந்து மீட்பதற்காகச் சென்ற வேளை வீட்டில் இருந்தவர்களைத் தாக்கினர். இதன்போது அங்கு கூடிய அயலவர்கள் உதவியால் வந்த ஏழு பேரும்பிடிக்கப்பட்டு, நையப்புடைக்கப்பட்ட பின்னர் கலாசாரம் பேணும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட 7 இளைஞர்களும் - உரும்பிராய், ஊரெழு, மயிலங்காடு, புன்னாலைக் கட்டுவன் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகிறது. இதில் ஒருவர் பாடசாலை மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் 28 வருடங்களாக காவலாளியாகக் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற வே.சுப்பிரமணியத்தின் சேவை நலன் பாராட்டு விழாவில் - சிவாஜிலிங்கம் எம்.பி.உரையாற்றுவதையும், அருகில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி க.மயிலேறும் பெருமாள், வே.சுப்பிர மணியம், யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப் பணியாளர் டொக்டர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் திருமதி கேதீஸ்வரன் ஆகியோரும் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (14)



இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்பது



பெயர் : க.கிறெளதர்
முகவரி : குருநகர்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------
முகவரி : ----------------
பிறந்த ஆண்டு: ----------------
இணைக்கப்பட்டுள்ளன.
----------------
பெற்றோர் ஒப்பம்


# வீதியோரங்களில் மண் அகழ்வு

கொக்குவில் —

யாழ்- மானிப்பாய் வீதியில் மானிப்பாயில் இருந்து ஆனைக்கோட்டை வரையான பகுதிகளில் வீதியோர மணல் அகளப்பட்டுள்ளது.

இதனால் மழைகாலங்களில் வீதியில் வெள்ளம் தேங்கிநிற்காமல் வடிந்து செல்லக் கூடியதாக உள்ளது.

அதேவேளை ஆறுகால்மடம் பகுதியில் வீதியோரங்களில் மணல் நீர் வடிந்தோடாமல் தேங்கிநிற்கவும், வெயில் காலங்களில் வீதியோரங்களுக்கு விலகிச் செல்லும் மோட்டார் வாகனங்கள் மணலில் வழுக்கி விபத்துக்களுக்குள்ளாக நேர்வதும் சுட்டிக்காட்டப்படுகிறது. (206)

# நடுக்கடலில் படகு உடைந்தது; மீனவர்கள் நீந்தி கரைசேர்ந்தனர்

நடுக்கடலில் படகு உடைந்ததையடுத்து 3 மீனவர்கள் நீந்திக்கரை சேர்ந்துள்ளனர். பருத்தித்துறை கொட்டடிப் பகுதியிலிருந்து, கடற்தொழிலுக்காகப் படகொன்றில் சென்ற மீனவர்களுக்கே இந்தஅவலம் நேர்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில் -

பருத்தித் துறை கொட்டடிப் பகுதியிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கடற்றொழிலுக்காகச் சென்ற மீனவர்களான பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த சி.ஜெயரட்ணம் (வயது-24), த.மகேசன் (வயது-24) எஸ்.இராசேந்தி (வயது - 19) ஆகியோரே இவ்வாறு கரை சேர்ந்துள்ளனர்.

கரையிலிருந்து சுமார் 15 கடல்மைல் தூரத்தில் 60 அடி ஆழப்பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு தொண்டு அமைப்புகளால் வழங்கப்பட்ட படகுகளே இவ்வாறு நடுக்கடலில் உடைவதால், கடற்றொழிலாளர்கள் உயிராபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை, சக்கோட்டை, பொலிகண்டி, முனை ஆகிய பகுதிகளில் இவ்வாறு பாவனைக்குதவாத 90 படகுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

# வலி.கிழக்குப் பிரதேச சபை நிதியில் புனரமைப்பு வேலைகள்


யாழ்ப்பாணம்

வலி.கிழக்கு பிரதேச சபையினரால் இந்த ஆண்டு சபை நிதியில் இருந்தும், புனர்வாழ்வு நிதியில் இருந்தும் சுமார் 66 லட்சத்து 19 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டு, வலி.கிழக்குப் பகுதியில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

இவ்வாறு புனரமைக்கப் பட்டு வரும் திட்டங்களாக இருபாலை தமிழ்க்கலவன் பாடசாலை திருத்த வேலைகள், அச்சுவேலி பொதுச்சந்தை திருத்த வேலைகளுடன் உரும்பிராய் ஆஸ்பத்திரி வீதி, புத்தூர் கிழக்கு சொக்கத்திடல் வீதி, நீர்வேலி சியாக் காட்டு மயானவீதி, கோப்பாய் மகிழடி விநாயகர் வீதி, அச்சுவேலி தெற்கு முழங்கால் சுடலைவீதி ஆகிய வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுவதுடன், இந்தப் புனரமைப்பு வேலைகள் யாவும் இந்த மாத இறுதியில் முடிவடையவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (90)




(33 ஆம் அத்தியாயம்)



# சுனாமி – ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

கமலம்மாவுக்கு நெஞ்சில் ஒரு மூலையில் வலித்தது...! அந்தப் பிஞ்சுமுகம் கேட்ட கேள்வி!... அது மீண்டும்!... முளைவிட்டது போல!.. அவள் கையால் நெஞ்சைத் தடவினாள்! ஓ!... இந்த நெஞ்சுவலி! எப்படி வருகிறது? எதையாவது கேட்கும் போது!... பழையதை எல்லாம் மறந்துவிட்டாலும்!... சிலவேளைகளில் இப்படி யாராவது கேள்விகளைக் கேட்டு, நெஞ்சில் ஓங்கி அறையும் போது... அந்த வலி நெஞ்சில் வந்து குந்திக் கொள்கிறது. இதுபற்றி அவள் யாரிடமும் இன்னமும் சொல்லவில்லை. ஆனால் பரிமளா இஞ்சை வந்தபிறகு.... இந்த வலி வரவில்லை! வாத்தியாருக்கும் இழப்புப் பெரிசாக இல்லை!... அவள் மெல்லத் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் இருந்தாள்.

"அம்மா!... இந்தாருங்கோ கொஞ்சம் சுடுதண்ணி குடியுங்கோ!" சங்கரின் பரிவான குரல்!... என்ன இதமான குரல்!... கமலம்மா அவன் மூக்குப் பேணியில் நீட்டிய வெந்நீரை வாங்கி இரண்டு மிடறு குடித்தாள். வெந்நீர்... தொண்டையால் இறங்கி நெஞ்சுக் கூட்டுக்குள் போய் வலியை விரட்ட அவள் சங்கரைப் பார்த்தாள்!... கவலையான முகத்துடன் கண்களில் அன்பைத் தேக்கி நின்ற அந்தப் பிஞ்சு



முகம்!... கலண்டரில் இருக்கும் 'பாலமுருகன்' போல் இருந்தது. ஆனால் பாலமுருகன் முகம் சிரித்த முகம்!... இந்த முகம்.... இந்தப் பார்வை நெஞ்சை வந்து வருடிக் கொடுக்க வலி போன இடம் தெரியவில்லை.

"இப்ப சுகமாப் போச்சு மோனை!... அவள் சொன்ன போது அந்தமுகம் பாலமுருகன் போலப் புன்னகை செய்தது.

அம்மா!... நீங்கள் சாப்பிடவில்லையே! எவ்வளவு பரிவோடு கேட்கிறான். வாத்தியார் கூட அவளோடு வாழ்ந்த இத்தனை வருஷத்தில் இப்படிக் கேட்டதில்லை. உடம்பில் ஏதோ மின்சாரம் பாய்ந்தது போலக் கமலம்மாவுக்குப் பழைய உற்சாகம் வந்துவிட்டது. மீண்டும் அவள் பழையபடி சுறுசுறுப்பாக இயங்கினாள். அடுக்களை வேலையெல்லாம் அரை மணி நேரத்தில் முடிந்துவிட்டது.

ஆனால் இப்ப இந்தப் பிள்ளை தாயின்ரை படத்தை நினைத்து அழுகிறதே! அவள் மனம் உள்ளே திட்டம் போட்டது. நாளைக்கு நானே இந்தப் பிள்ளையைக் கூட்டிப் போக வேணும்.

"ராசா... நீ கவலைப் படாதே! நாளைக்கு நானே உன்னைக் கூட்டிக் கொண்டு போறன்!" சங்கர் சரி என்று தலையசைத்தான்.

அடுத்தநாள் காலை விடிய எழும்பிக் கமலம்மா கிணற்றடிக்குப் போய் முகம் கழுவிக் கொண்டு வந்து, சாமி விளக்கைக் கொளுத்தியபோது சங்கர் ஓடிவந்தான்!....

"அம்மா! அவரைக் காணவில்லை!"

"என்ன ராசா சொல்லுறாய்! யாரைக் காணவில்லை?"

"எங்களைக் கூட்டி வந்தவரைக் காணவில்லையம்மா!...

சாமியின் விளக்கு சுடர்விட்டெரிய ஒரு வினாடி கமலம்மா கைகூப்பி நின்றாள்.

"கடவுளே இதுகளை இன்னும் ஏன் சோதிக்கிறாய்?"

சாமியறையை விட்டு முன்மண்டபக் கதவைத் திறந்து பார்த்தாள். மூலையில் பாயோடு தலையணை சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அவசரமாக முன் கதவைத் திறந்தாள். அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளையும், அதனருகே கிடந்த தோற் செருப்பையும் காணவில்லை! வெளியே பார்த்தாள். மழை பெய்து ஈரமான நிலத்தில் சைக்கிள் சில்லின் தடமும் அந்த மனிதனின் காலடியும் தெளிவாகப் பதிந்திருந்தன. நாய் மட்டுமே வெளியே கேற்றடியில் எதையோ மணந்து கொண்டிருந்தது. கமலம்மா கேற்றடிக்குப் போனாள். சங்கரும் கூடவே போனான். கேற் உள்ளே பூட்டால் பூட்டிக் கிடந்தது. ஆனால் சைக்கிள் தடம் வெளியே பதிந்து கிடந்தது. திறப்பால் பூட்டிக் கிடந்த கேற்றைத் திறந்து இருவரும் றோட்டுக்கு வந்தார்கள். றோட்டில் ஒருவரும் இல்லை. றோட்டுக்கு அப்பால் கடல் மட்டும் அமைதியாகப் பரவிக் கிடந்தது.

"அம்மா அவர் எங்களை விட்டிட்டுப் போட்டார் போலக் கிடக்கு!" சங்கர் கேட்டபோது கமலம்மா தலையை அசைத்தாள். அந்தக் கணமே ஏதோ முடிவு செய் தவள் போலத் திரும்பினாள். பக்கத்துக் கோயில் மணியோசை கேட்டது. மீண்டும் வீட்டுக்குள் வந்தாள். சங்கரும் தொடர்ந்து வந்தான். வாத்தியார் அப்போதுதான் எழும்பிக் கட்டிலில் இருந்தார். அவருக்குப் பக்கத்தில் சங்கரின் தங்கை கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றாள்.

"என்ன கமலம்!.... என்ன விசயம்!... வெள்ளென எழும்பி றோட்டுக்கு வாறாய்?"

"இந்தப் பிள்ளையளோட வந்தவரைக் காணவில்லை. அவரின்ரை சைக்கிளையும் காணவில்லை!"

"என்ன!... அந்தக் கள்ளன் ஓடியிட்டானே?"

ஏதோ எதிர்பார்த்தவர் போல வாத்தியார் கேட்டபோது, கமலத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"அவன்ரை கதையிலை நான் பிடிச்சுப்போட்டன்! இந்தப் பிள்ளையளை வைச்சு ஏதோ வியாபாரம் செய்யப் போறான் எண்டது எனக்குத் தெரிஞ்சிட்டுது"

"இப்ப பிள்ளையளை..." ஏதோ சொல்ல வந்த கமலம்மா நிறுத்திவிட்டு... வாத்தியாரைப் பார்த்தாள்!

"நீ போய் ஆட்டுப்பாலைக் கறந்து கோப்பி போடு!.. நான் பிள்ளையளை முகம் கழுவிவிச்சுக் கொண்டு வாறன்!" வாத்தியார் சொல்லிவிட்டுப் போர்வையை மடித்து வைத்தார்.

"வாங்கோ! பிள்ளையள் நாங்கள் போய் முகம் கழுவிக் கொண்டு வருவம்!" தங்கை அண்ணனைச் சுரண்டி விரலால் இரண்டு காட்டினாள். வாத்தியார் அதைக் கண்டுவிட்டார். வகுப்பறைகளில் எத்தனையோ மாணவ மாணவிகள் காட்டும் அந்தக் குறிப்பு! அவருக்கு நன்கு விளங்கும்.

"அதுக்கெல்லாம் பின்னால வசதி இருக்கு. வாங்கோ பிள்ளையள்!" கமலம்மாவுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு பொறுப்பாக வாத்தியார் மாறி விட்டார். பால் கறக்கும் செம்பை எடுத்துக் கொண்டு ஆட்டுக் கொட் டிலுக்குப் போனாள்! அவளைக் கண்டதும் ஆட்டுக் குட்டிகள் இரண்டும் மே... மே... என்று கத்தி வரவேற்றன. தாயும் எழும்பி நின்று அவளைப் பார்த்து மே.... என்றது. அவள் குட்டிகள் இரண்டையும் அவிழ்துப் பாலூட்ட விட்டாள். இரண்டும் துள்ளிக் கொண்டு போய் தாயின் மடியில் ஒரு முறை முட்டிவிட்டு முலைக் காம்பை ஆளுக்கொன்றாகப் பிடித்துக் கொண்டு சுவைக்கத் தொடங்கின. அந்தக் குட்டி கள் மகிழ்வோடு வாலை ஆட்டியபடி தாயின் மடியை முட்டிப் பால்குடிக்கும் அழகை கமலம்மா நின்று ரசித்தா. சிறிது நேரத்தில் குட்டிகளை இழுத்துக் கயிற்றில் பிணைத்துவிட்டு தாயின் மடியைப் பற்றிக் குந்தி யிருந்து செம்பில் பாலைக் கறக்கத் தொடங்கினாள். சில நிமிடங்களில் அந்தப் பெரிய செம்பு நிறைந்து விட்டது. மீண்டும் குட்டிகளை அவிழ்த்துவிட்டுவிட்டு பாற்செம்போடு அடுக்களைக்குத் திரும்ப எண் ணியவள், கிணற்றடியைத் திரும்பிப் பார்த்தாள். அங்கே வாத்தியார் சங்கரின் தங்கைக்கு முகம் கழுவிக் கொண்டி ருந்தார். அற்புதமான காட்சி!... அவள் மனதில் வாத்தியாரில் திடீரென ஒரு அனுதாபம் பிறந்தது.

"பாவம்!... எத்தனை வருசமா மனுசன் நினைச்சு ஏங்கிய ஏக்கம்!

இண்டைக்கு சந்தோஷ மாக இருக்கிறார்"

அவள் நெஞ்சின் ஆழத்தில் இருந்து ஒரு பெரு மூசசு வந்தது. அதை வெளியேஎறிந்து விட்டாள். அடுப்பை மூட்டி பாலைச் சட்டியில் விட்டு வைத்தாள். பால் பொங்கிவர கொஞ்சம் கோப்பித் தூளைப் போட்டாள். அதை இறக் கினாள். கோப்பியின் மணம் மூக்கைத் துளைத்தது. அதை ஆற்றி வாத்தி யாருக்குச் சீனி போடாமல் ஒரு மூக்குப் பேணியில் விட்டு வைத்து விட்டு மிச்சத்திற்கு சீனியைப் போட்டுக் கலக்கினாள். அதை ஆற்றி இரண்டு மூக்குப் பேணியில் ஊற்றி வைத்தாள். இவ்வளவு நாளும் இரண்டு மூக்குப் பேணியில்தான் கோப்பி விடுகிறது வழக்கம்! ஆனால் இன்றைக்கு இரண்டு பேணி கூட!... மனம் சந்தோஷத்தால் பொங்கியது. உள்ளே சாமியறையில் வாத்தியார் தேவாரம் பாடும் குரல் கேட்டது.

"மந்திரமாவது நீறு.... வானவர் மேலது நீறு.....!"

அவருடைய குரலைத் தொடர்ந்து.... அந்தப் பிஞ்சுக் குரல்கள் அதைப் பாடிய போது கமலம்மாவின் நெஞ்சில் ஒரு பூவால் யாரோ ஒற்றியதுபோல!... காதுகளில் அந்தக் குரல் வந்து நிறைய, கால்கள் தாமாகவே. சாமியறையை நோக்கி நடந்தன! தேவாரம் முடிய வாத்தியார் கர்ப்பூரம் காட்டினார். பிள்ளைகளிடம் கர்ப்பூரத் தட்டை நீட்ட அவர்கள் தொட்டுக் கும்பிட்டார்கள். கமலாவும் தொட்டுக் கும்பிட்டா!

சங்கருக்கு அந்த அனுபவம் புதிது. என்ன இன்பமான பாட்டு. வாத்தியார் குரல் மந்திரம் போல அவன் காதில் இன்னும் ஒலித்தது. மீண்டும் விபூதியைப் பூசிக்கொண்டு சாமியை விழுந்து கும்பிட்டார்கள்.

"வீடும் ஒரு கோயில் தான்!"

சங்கரின் மனம் நிறைந்தது. கமலம்மா தந்த கோப்பியைக் குடித்தபோது அம்மாவின் நினைவு வந்தது. கொஞ்சம் வேதனை முகத்தில் நிழலாடியது. அதை வாத்தியார் கண்டு விட்டார்.

"கமலம் கெதியாக் கொஞ்சம் புட்டு அவி!... நான் ஒருக்காப் பாதரிடம் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு போக வேணும்!" கமலத்திற்கு வாத்தியாரின் திட்டம் விளங்கிவிட்டது. சங்கரின் முகத்தில் பூரிப்பு நிறைய அவன் பார்வை சாமியறையை நோக்கிச் சென்றது.

"அண்ணா இண்டைக்கு அம்மாட்டைப் போவமே!" அவள் கேட்ட போது.... உள்ளே நுழைந்த ஒரு பையன்! கையில் செவ்வரத்தம் பூக்களோடு வந்தான்!... வாத்தியார் முகத்தில் ஒரு சிறு திகைப்பு... சமாளித்துக் கொண்டார். பூவை அவனிடம் வாங்கிக் கொண்டு கமலம்மாவுக்குக் குரல் கொடுத்தார்.

"தம்பிக்கும் கோப்பி கொண்டா!"

வந்த பையனோ அவரோடு நின்ற இரு பிள்ளைகளையும் பார்த்தான்! அவனது பார்வையில் ஒரு வித பொறாமை பரவிக் கிடந்தது. அதை வாத்தியார் கண்டார்.!

(தொடரும்)

# குழந்தைகளை எப்படி ஊக்குவிக்கலாம்

எதிர்காலத்தில் நம் குழந்தை என்னவாக வேண்டும் என்று நாம் ஆசைப்படுவது இருக்கட்டும்... நம்மில் எத்தனை பேர் நம் குழந்தை என்னவாக ஆசைப்படுகிறது என்று உண்மையில் தெரிந்து வைத்திருக்கிறோம்.?

உங்கள் குழந்தை எதில் திறமைசாலியாக இருக்கிறான். என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் 'இதைச் செய், அதைச் செய்' என்று குழந்தைகளை கட்டாயமாக வலியுறுத்துவதை விடுங்கள் என்கிறார்கள் வல்லுனர்கள்.

சரி குழந்தைகளுக்கு எதில் விருப்பம் என்று எப்படித்தான் நாம் தெரிந்து கொள்வது?

இதோ பெற்றோர் செய்ய வேண்டிய சில விடயங்கள் இவைதான்.



குழந்தைகளின் உலகமே தனி... நாம் பார்க்கிற அத்தனையும் நிஜம் இதை எல்லாமே நம்மாலும் செய்ய முடியும் என்று தான் அவை நம்பும். அவர்களிடம் – சீச்சீ அதெல்லாம் முடியாது. அப்படியெல்லாம் செய்யக் கூடாது என்ற சொல்லி அவர்களின் நல்ல கற்பனைகளை முக்கியமாக முதல் நம்பிக்கையை நாம்தான் உடைத்துவிடுகிறோம். தான் எப்படி வரவேண்டும், யாராக வரவேண்டும் என்று வெளியே சொல்லத் தெரியாத அந்தக் குழந்தைகளின் உணர்வுளை இப்படி ஆரம்பத்திலேயே நாம் தான் நசுக்கி விடுகிறோம். பெற்றோராக இருந்து நாம் செய்ய வேண்டியது இதுதான். அவர்களுடைய குரல் எதுவாக இருந்தாலும், ஆரம்பத் தடைசொல்லாமல் கேட்டுக் கொள்ளுங்கள். அவற்றை நடைமுறையில் செயற்படுத்த நல்ல வழிகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள.

உங்கள் குழந்தைகளுக்கு விதவிதமாக நிறைய விடயங்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள். அதில் கிடைக்கும் அனுபவங்கள் தான் அவர்களுடைய வளர்ச்சிக்கு உதவும்!

படம் வரைவது, படங்களைக் கிழித்து ஒட்டி கொலாஜ் ஒட்டு வேலை செய்வது. பாடுவது என்று ஏதாவது சில கலைகளை குழந்தைகள் செய்ய ஆசைப்படும் போது, அவர்களோடு ஒத்துழையுங்கள். இந்தக் கலைகள் குழந்தைகள் தன்னைப்பற்றி அறிந்து கொள்வதற்கும், தன்னைப் புரிந்து கொள்வதற்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. குழந்தைகளுக்குப் புதுசாக எதையாவது செய்துபார்க்க வேண்டும் என்ற பரிசோதனை முயற்சியும், மனப்பான்மையும் அப்படிச் செய்வதில் ஓர் ஒழுங்கையும் இந்தக் கலைகள் ஏற்படுத்தித் தருகின்றன.



இவன் நாம் சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்வதில் கெட்டிக்காரன் என்று புகழ்ந்திருப்பீர்கள். குழந்தையின் மனதில் அடிக்கோடு இட்டுக் கொள்ளுங்கள் அந்த ஞாபகசக்திதான் அவனது பலம்! அவனுடைய பலத்தைக் கண்டுபிடித்த பின்பு அதை ஊக்குவிப்பதுடன், அவர்கள் இஷ்டப்படி அது குறித்து மேற்கொண்டு கற்கவும் அனுமதியுங்கள்.

அவர்களுடைய எண்ணங்களை ஆசைகளை நனவாக்க சாத்தியமுள்ள வழிகளைக் கண்டுபிடித்து ஊக்கவியுங்கள்.

உங்கள் குழந்தை – எழுதும் திறமை உடையவன் என்றால், அவனுடைய எழுத்தை அரங்கேற்ற உதவுங்கள். பள்ளி விழாக்களுக்கு நாடகம் எழுதுவது, உறவினர்கள் கூடும் இடங்களில் நாடகம் போடுவது என்று அவனுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள். இப்படி இல்லாவிட்டாலும் கூட தினமும் டைரி எழுதும் பழக்கத்தையாவது ஏற்படுத்திக் கொடுங்கள்.

உங்கள் குழந்தைக்கு இசையிலோ அல்லது நடனமாடுவதிலோ அல்லது பாடுவதிலோகூட விருப்பம்இருக்கலாம். அப்படி விரும்புகிறவர்களை அதற்கான பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துவிடுங்கள். மற்றக் குழந்தைகளுடன் பழகும்போது அவர்களுடைய வளர்ச்சிக்குத் தேவையான விடயங்களை அவர்களிடமிருந்துகூட உங்கள் குழந்தை கற்றுக்கொள்ளும்!!

உங்கள் குழந்தைகளுக்குச் சின்னச் சின்ன கைவேலைகள் செய்வதில் ஆர்வம் என்றால், செலவு கணக்குப் பார்க்காமல் அவர்களுக்குத் தேவையான சிறுசிறு பொருள்களை வாங்கிக் கொடுங்கள். வால் பேப்பர்கள் ஒட்டுவது, கிரீட்டிங் கார்ட் செய்வது பழைய வார மாத பத்திரிகைகளிலிருந்து படங்களை எடுத்து கொலாஜ் ஒட்டு வேலை செய்வது என்று நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள். களிமண்ணில் உருவங்களைச் செய்வது குழந்தையின் கற்பனை திறனைவெளிக் கொண்டு வருவதற்கு ஒரு சிறந்த வழி என்று சொல்லலாம். வண்ணங்களுடன் அவர்கள் விளையாடுவதை அனுமதியுங்கள். ஒரு ரோஜாவுக்கு நீல நிறம்தான் அடிப்பேன் என்றால் இருக்கட்டுமே... வித்தியாசமாக இருக்கும் என்ற அவர்களுடைய கற்பனைகளுக்கு வழிவிடுங்கள்.

அவர்கள் கண்ணாமூச்சி ஆடுவதையோ கள்ளன் பொலிஸ் விளையாடுவதையோ அனுமதியுங்கள்.

எல்லாவற்றுக்கு மேல் குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட சுதந்திரம் இருக்கிறது! அவர்களை உங்கள் பேச்சை கேட்பதற்கென்றே கடவுள் தந்த அடிமை போல் நடத்தி, உங்கள் விருப்பு வெறுப்புக்களை அவர்கள் மீது திணிக்காதீர்கள்!

# கூச்சப்படுவதை உடனே நிறுத்துங்கள்!

## அது மனநோய்களை ஆரம்பத்திலேயே தடுக்க உதவும்

கூச்சப்படுவது என்பது சாதாரண விடயம் தான். எல்லோரும் ஏதாவது ஒரு விடயத்துக்காக ஏதாவது ஒரு சமயம் கூச்சப்படுவார்கள். அந்த விதத்தில் அது சரிதான். ஆனால் எடுத்தற்கெல்லாம் கூச்சப்பட்டால்? கூச்சப்படக்கூடாத செயல்களுக்கெல்லாம் கூச்சப்பட்டால்...?

அவருக்கு ஏதோ பிரச்சினை என்று தயங்காமல் முடிவுக்கு வந்துவிடலாம். மனதளவில் அவருக்கு ஏதோ பாதிப்பு என்றுதான் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இருபத்தொன்பது வயதான ஒருவருக்கு - பெண்கள் என்றால் அதிகம் கூச்சம், அதுவும் பெண்களைத் தொடர்புபடுத்தி சக ஊழியர்கள் பேசிவிட்டால் கூட்டத்தில் மனிதர் நெளிவார். இது இயற்கை. அனால் அலுவலகத்தில் உடன் பணிபுரியும் பெண்கள் யாராவது ஏதாவது சந்தேகம் கேட்டால்கூட நேருக்கு நேராக கண்ணைப் பார்த்து பதில் சொல்லமாட்டார். தன் வீட்டிலிருந்து போன் அடித்தால் கூட இவருக்குப் பயம் யாராவது பெண் போனில் பேசிவிடுவாளோ என்ற கூச்சம். இவ்வளவுக்கும் அவருக்குத் திருமணம் வேறு ஆகிவிட்டது.

இன்னொருவரின் கூச்சம் வேறு மாதிரியாக இருந்தது. ஒரு விலாசத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூட கூச்சப்படுவார். அது ஆணோ பெண்ணோ வேர்த்து விறுவிறுத்து தயங்கித் தயங்கி ஏதோ தவறு செய்தவர் போல் கேட்பார். அவ்வளவு கூச்சம்.

இதைவிட இன்னொருவரின் கதையையும் கேளுங்கள். மனிதர் யாருடனும் ஒட்டுவதில்லை. கூச்சம் காரணமாக இந்த சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ்பவர். ஒரு தனியார் கம்பெனியின் மேனேஜராக இருந்தும் இவருக்குள் இருக்கும் கூச்சம் மற்றவர்களோடு சகஜமாக இருக்கவிடவில்லை. அதனால் திருமணம் கூடச் செய்து கொள்ளஅவர் விரும்பவில்லை.

இந்த மூவருக்கும் என்ன ஆயிற்று? ஏன் இவர்கள் இப்படிக் கூச்சப்படுகிறார்கள். உளவியல் அடிப்படையில் இவர்கள் மூவரும் Social Anxiety Disorder (SAD) என்று சொல்லக்கூடிய ஒரு வகைக் கோளாறால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மன அழுத்தம், மனப் பதட்டம் போன்ற மனநலப் பாதிப்புக்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்பவர்கள் Social Anxiety Disorder பற்றித் தெரிந்த கொள்ள முனைவதில்லை. கூச்சப்படுவதை அவர்கள் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை.

கூச்சப்படுவது என்பது ஒரு சாதாரண, பொதுவான குணம் தான் என்றாலும் அது வளர வளர பிரச்சினைகள் வளர்ந்து வாழ்க்கை முறையையே மாற்றியமைத்து விடும். நம் நாட்டில் பலர் இந்தப் பாதிப்பால் பல அவஸ்தைகளுக்கு ஆளாகியுள்ளார்கள். இது மனஅழுத்தம், மது அடிமை ஆகியவற்றுக்கு அடுத்த நிலையில் உள்ள பாதிப்பாக ஆய்வு ஒன்றுகூறுகிறது.

மற்ற மனநல பாதிப்புகளில் அதற்கான அறிகுறிகள் தென்படும். ஆனால், இதில் சாதாரணமாக கண்டுகொள்ளும்படி தெரியாது. ஆனால், அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலில்லாமல் இருப்பார்கள். அதனால் Social Anxiety Disorder உள்ளவர்கள் மனநலப் பிரச்சினையுடையவர்களாக இருப்பதால் அவர்களுக்கு நல்ல சிகிச்சையளிப்பது அவசியம்.

**ஆரம்ப அறிகுறிகள்**

Social Anxiety பொதுவாக இளமைப் பருவத்தின் இறுதியிலும் நாற்பது வயதுக்கு முன்பும் தான் ஆரம்பமாகும். மிக மெதுவாகத்தான் இந்தக் குணம் வளரும் ஆனால், வளரவளர அது மன அழுத்தம் மிக்க அனுபவத்தைத் தரும் பலர் முன்னிலையில் பேசக் கூச்சப்படுவார்கள். இவர் கள் மற்றவர்கள் முன் சாப்பிடக் கூட கூச்சப்படுதல், தொலைபேசியில் பேசப் பயப்படுதல், ஏதாவது திரும்பி வந்தால் அதை வாங்கக் கூச்சப்படுதல், தன்னை மற்றவர்களிடம் அறிமுகப்படுத்த முடியாமல் தவித்தல், தன் கருத்துக்களை வெளியில் சொல்லத் தயக்கம் என்று பல அறிகுறிகள் தென்படும்.

மனவழியாகவும், உடல்வழியாகவும் இதன் அறிகுறிகள் தென்படும். நியாயமானதைக்கூட எடுத்துச்சொல்லப் பயப்படுதல், இதயம் கனத்தல், மூச்சு விடுவதில் சிரமம், வயிற்றில் வண்ணத்துப் பூச்சிகள் பறப்பது போன்ற உணர்வு அல்லது டயரியா தசை நடுக்கம் என்று அதன் அறிகுறிகள் தென்படும். குறிப்பாக பொதுவான அறிகுறி என்பது முகம் சிவந்து போதல்தான்.

இதை முறையாகப் பரிசோதித்து உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டால். அவர்களது வாழ்க்கை முறை மாறுபடும், குடும்ப உறவுமுறைகூட பாதிக்கப்படும். சிலர் இதைக் கட்டுப்படுத்த மது, புகை, போதை மருந்துகள் எடுத்துக் கொள்வதுண்டு. ஆனால் இவை யாவும் நிவாரணமளிக்காது.



**கூச்சப்படுவதிலிருந்து விடுபட சில வழிமுறைகள்.**

**1. மனக்கட்டுப்பாடு'**

எந்த ஒரு விடயத்திலும் மனமானது விகாரமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உடலைப் போல மனதுக்கும் நோய் எதிர்ப்பு, தடுப்பு முறை என்று உண்டு. இவை மனக்கட்டுப்பாட்டில் தான் நிறைவுறும்.

அடிக்கடி ஒரு கெட்ட எண்ணம், காரணம் இல்லாமல் எழும். ஒரு குறிப்பிட்ட கெட்ட வாக்கியம் மனதில் தோன்றும். தீய சொர்ப்பனங்கள் உண்டாகும். இது உள்மனவேலை. இதை அடக்கி ஆள்பவர்கள் அதிகக் கூச்சப்படாதவர்களாக இருப்பார்களாம்.

**2. மாற்றுக் கருத்தைப் பதிவு செய்தல்**

ஒழுக்கமற்ற ஒன்றை அது தவறானது. நமக்குக் கேடு விளைவிப்பது என்ற கருத்தை மனதில் பதிவு செய்யச் செய்ய அந்த எண்ணம் தீர்ந்துபோகும். எனக்குக் கூச்சம் என்பதே இல்லை. நான் நன்றாகத்தான் பேசுகிறேன். பழகுகிறேன். என் உடல் உறுப்புகள் நன்கு ஒத்துழைக்கின்றன என்று மீண்டும் மீண்டும் சொல்லி உங்களை நீங்களே தேற்றிக் கொள்ளவேண்டும்.

**3. தாழ்வு மனப்பான்மை கூடாது**

தாழ்வு மனப்பான்மைதான் Social Anxiety Disorder இற்கு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்வதால்தான் அவர்கள் மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்கிறார்கள். அதனால் தாழ்வு மனப்பான்மையை அறவே ஒதுக்கினால் கூச்சம் தானாகவே குறையும்.

**4. சூழ்நிலையைப் புரிந்து கொள்ளுதல்**

உங்களுக்கு என்ன தேவை? உங்கள் உரிமை என்ன? உங்களின் உள்நோக்கம் என்ன? சாதாரணமாக இந்தச் சூழலில் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள்? அது சரியா?தவறா? உங்கள் கருத்தைச் சொல்வதால் என்ன ஆகிவிடும் என்று பயப்படுகிறீர்கள்? அதில் உங்களுக்கு யார் யாரெல்லாம் உதவமுடியும்? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு அதற்கு பதில் அளித்துப் பாருங்கள். உங்களால் அந்தச் சூழ்நிலையை ஓரளவு புரிந்து கெண்டுசெயற்பட முடியும் அதுவே உங்கள் கூச்சத்தை ஓரங்கட்டும்.

**5. உணர்வை வெளிப்படுத்துங்கள்**

கூச்ச சுபாவம் உள்ளவர்கள் தங்கள் உணர்வுகளை வெளியில் காட்டிக் கொள்வதே இல்லை. நண்பர்கள், குடும்ப் உறவினர்கள் ஆகியோரிடம் முதலில் உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள். உங்கள் கூச்சத்துக்கு எது காரணமாக இருக்கிறது என்பதை அப்போதுதான் நீங்கள் தெரிந்து கொண்டுகளைய முடியும்.

**6. மனக் கற்பனை வேண்டாம்**

பொதுவாகக் கூச்ச சுபாவம் உள்ளவர்கள் எதையாவது கற்பனை செய்து கொண்டு அழுவார்கள். அது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதற்குச் சமமானதாகும். எதுவும் நடவாது என்ற நிலையாலும், அது நடந்து விடுமோ என்ற நிலையாலும், அது நடந்து விடுமோ என்ற அச்சத்தால் தான் அவர்கள் தங்கள் உணர்வுகளை கூச்சம் மூலம் வெளிப்படத்தி அதிலிருந்த தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அது நடைமுறையில் மற்றவர்களின் பார்வைக்குக் கேலிக்குரியதாகக் கூட மாறக்கூடும்.

**7. சிகிச்சை**

இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டால் மன வழி மருத்துவத்தால் அதைக் குணப்படுத்த முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது நரம்பு மண்டலங்களைத் தாக்கி மூளையைச் செயலிழக்கச் செய்துவிடும். ஹார்ட் அட்டாக் உள்ளிட்ட பல உடல் நோய்கள் வரக் காரணமாகிவிடும். மருத்துவர்கள் இதற்கு SSRI (Sclective Serotonin Reuptake Inhihtor) வகை மருந்துகளைப் பரிந்துரைக்கிறார்கள். மூளையின் இரசாயன மாற்றத்தை அவை கட்டுப்படுத்தவதால் கூச்சத்தைத் தூண்டும் உணர்வு இதனால் கட்டுப்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.


---

# இல்லம் சிறக்க பெற்றோருக்கு மதிப்பளியுங்கள்

- ★ தாய் தந்தையரிடம் மிகக் கன்னியமான முறையிலட் நடந்துகொள்ளுங்கள்.
- ★ பொற்றோரில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்துவிட்ட நிலையில் உம்மிடம் இருந்தால் எந்த சமயத்திலும் ஒரு வார்த்தையாகக் கூட அவர்களை சீ என்று கூறாதீர்கள்.
- ★ அவர்களைக் கடிந்தும் பேசாதீர்கள்! மாறாக அவர்களிடம் கண்ணியமாகப் பேசுங்கள்!
- ★ பணிவுடனும் கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்ளுங்கள்.
- ★ அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுங்கள். என் இறைவனே சிறுவயதில் என்னை இவர்கள் எவ்வாறு கருணையுடனும் பாசத்துடனும் வளர்த்தார்களோ... அவ்வாறு நீர் இவர்கள் மீது கருணைபுரிவாயாக என்று கேளுங்கள்.
- ★ எமது பெற்றோர் இறந்த பின்னரும் அவர்களுக்கு நான் ஆற்றவேண்டிய கடமை ஏதும் எஞ்சியுள்ளதா என்று ஒரு தோழர் கேட்க நபிகள் நாயகம் (ஸல்) பதிலளித்தார்.

ஆம் உங்கள் பெற்றோர்களுடைய வாழ்க்கையில் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுகளுக்காக இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள்.

- ★ மரணத்துக்கு முன் அவர்கள் வெளியிட்ட ஆசை, லட்சியம் கனவு போன்றவற்றை நிறைவேற்றுங்கள்.
- ★ பெற்றோர்களின் உறவுகளைத் துண்டிக்காமல் வாழுங்கள்.
- ★ பெற்றோர்களின் நண்பர்களுக்குக் கண்ணியம் அளியுங்கள். அவர்களை உபசரியுங்கள்.



---

மற்றவர்கள் திருப்தியிலும், **பெரியார்** சந்தோஷத்திலும் நுழைந்துகொண்டு தொடதற்கெல்லாம் இது காதலல்ல அது காதலுக்கு விரோதம், அது காம இச்சை, இது மிருக இச்சை, இது விபச்சாரம் என்பன போன்ற அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தைகளை ஒருவிதப் பொறுப்புமில்லாதவர்கள் எல்லாம் கூறுவதால், அப்படிப்பட்டவர்கள் கூற்றையும் கூறும் காதலையும் சற்றுப் பார்த்துவிடலாம்.

# ஏது கற்பு? ஏது காதல்?

உண்மையாகப் பெண்கள் விடுதலை வேண்டுமானால், ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்ப்பந்தக் கற்புமுறை ஒழிந்து இரு பிறப்பிற்கும் சமமான சுயேட்சைக் கற்புமுறை ஏற்படவேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும்.

கற்புக்காக கணவனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மறையவேண்டும்.

கற்புக்காக மனதுள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக் கொண்டு காதலும், அன்பும் இல்லாதவனுடன் இருக்க வேண்டும் என்ற சமூகக் கொடுமையும் அழியவேண்டும்.

எனவே, இக் கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிரிவில் உண்மைக் கற்பை, இயற்கைக் கற்பை, சுதந்திரக்



கற்பை காணாலாமே ஒழிய, நிர்ப்பந்தங்களாலும், ஒரு பிறப்புக்கொரு நீதியாலும் வலிமைகொண்டவன்- வலிமையற்றவனுக்கு எழுதிவைத்த தர்மத்தாலும், ஒருக்காலும் காணமுடியாது என்பதுடன், அடிமைக் கற்பையும் நிர்ப்பந்தக் கற்பையும் காணலாம். அன்றியும் இம்மாதிரியான கொடுமையைவிட வெறுக்கத்தக்க காரியம் மனித சமூகத்தில் வேறொன்றும் இருப்பதாக என்னால் சொல்லமுடியாது.

இந்தக் காதல் காரணத்தினாலேயே ஒரு கணவன் ஒரு மனைவியுடனும், ஒரு மனைவி ஒரே கணவனுடனும் மாத்திரம் இருக்கவேண்டியது என்றும் கற்பித்து அந்தப்படி கட்டாயப்படுத்தப்பட்டும் வருகின்றது.

ஆனால், இந்தப் படி சொல்கிறவர்களை எல்லாம் உலக அனுபவமும், மக்களின் அனுபவ ஞானமும் இல்லாதவர்கள் என்றோ, அல்லது இயற்கையையும் உண்மையையும் அறியாதவர்கள் என்றோ, அல்லது உண்மையை அறிந்தும் வேறு ஏதோ காரியத்திற்கு வேண்டி, வேண்டுமென்றே மறைக்கின்றவர்கள் என்றோதான் கருதவேண்டியிருக்கின்றது.


அன்றியும் இம்மாதிரி விடயங்களைப் பற்றிச் சொல்லும் பொழுது மற்றொரு விடயம் என்னவென்று சொன்னால், காதலன் காதலியாக வாழ்வது என்ற தன்மையெல்லாம், வேறு ஒருவன் ஜோடி பார்த்து சேர்ப்பதும், பிள்ளைகளைப் பெறுவதற்கும், வீட்டு வாழ்க்கை உதவிக்கென்றும், இயற்கை உணர்ச்சிக்குமான பரிகாரத்திற்காகத்தான் சேர்க்கப்படுகின்ற ஜோடிகளாக இருந்து வருகிறதே தவிர, தாங்களாக, காதல் மிகுதியால், காதல் தெய்வத்தால் கட்டுவித்ததைக் காணுவது அரிதாகத் தானிருக்கின்றது.

இது எப்படியிருந்தாலும், எந்த ஒரு காரண்த்திற்காக ஆனாலும், ஒரு ஆணின் அல்லது ஒரு பெண்ணின் அன்பு, ஆசை, காதல், காமம், நட்பு, நேசம், மோகம், விரகம் முதலானவைகளைப் பற்றி மற்றொரு பெண்ணோ, ஆணோ மற்ற மூன்றாமவர்கள் யாராவது பேசுவதற்கோ, நிர்ணயிப்பதற்கோ, நிர்ப்பந்திப்பதற்கோ சிறிதுகூட உரிமையே கிடையாது என்றும் சொல்லுகிறோம்.

(தொடரும்...)

# வடமராட்சியில் தொடரும் மழையால் முகாம்களிலுள்ளோர் இடப் பெயர்வு







வடமராட்சி

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் அண்மையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக முகாம்களிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று வடக்கு, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன் கிராமங்களில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களில் ஒரு பகுதியினர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். மழை தொடர்ந்து பெய்யுமேயானால் முகாங்களிலுள்ள முழுக்குடும்பங்களும் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

இடைத்தங்கல் முகாங்களினுள்ளும், அதன் சுற்றுப் புறங்களிலும் ஒரு அடி வரை மழைநீர் தேங்கியுள்ள நிலையில், இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதுடன் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கும் பணிகளிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்யுமானால் எஞ்சியுள்ள உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களும் இடம் பெயரும் நிலை ஏற்படலாம். அத்துடன் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தல், உணவளித்தல் ஆகிய பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியநிலை ஏற்படலாம் எனத் தெரிவித்தார். (21)

## மகாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம்

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான ஓகஸ்ட் ,செம்ரெம்பர் மாத மகாபொல கொடுப்பனவு தற் பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

நிறுவனத்தில் மகாபொல கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் தமது ஓகஸ்ட், செம்ரெம்பர் மாத கொடுப்பனவுகளை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென நிறுவன இயக்குநர் இராஜரட்ணம் தெரிவித்துள்ளார். இந்தக் கொடுப்பனவை சகல வருட மாணவர்களும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இயக்குநர் மேலும் தெரிவித்தார். (25)

## 'விழி' இதழ் வெளியாகியது

கிளிநொச்சி

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் மாதாந்தம் வெளிப்படும் வழி சஞ்சிகையின் 62 ஆவது இதழ் வெளியாகியது.

முடி உதிர்தல், தொற்று நோய்கள், நிறை எடுத்தலின் அவசியம் என்பன பற்றியும் விரிவாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ)

## மாவீரர் நாள் ஆரம்ப ஒழுங்குகள் கிராமங்கள் தோறும் நடைபெறுகிறது

வடமராட்சி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கான ஆரம்ப ஒழுங்குகள் கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பிரதேசத்திலுள்ள சமாசம், அங்கத்துவ பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர், வடமராட்சி கிழக்கு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற சந்திப்பில் - மாவீரர் நாள் நிகழ்வுகள், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, வளைவுகள், பதாதைகள் கட்டுதல், சிரமதானம் செய்தல் ஆகிய நிகழ்வுகள் பற்றி வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியற் துறைப் பொறுப்பாளர் அன்பழகன் கருத்துரை வழங்கினார்.

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராம ரீதியாக மாவீரர் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு இந்த மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள மாவீரர் பெற்றோர்கள் இந்த மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்படவுள்ளனர். (21)

## தொடரும் பெரு மழையால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின

வடமராட்சி

கடும் காற்றுடன் கூடிய பெரு மழை தொடர்ந்து பெய்துவருவதால் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள வீதிகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மாமுனை தொடக்கம் ஆழியவளை வரையான கடற்கரை வீதி கல் பரவியிருப்பதாலும், சில இடங்களில் வீதி ஓரங்களில் கல் பறிக்கப்பட்டிருப்பதாலும் வாகனங்கள் செல்வது வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் பிரயாணம் மேற்கொள்வதில் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். (21)

## விழிப்புணர்வு கருத்தரங்குகள்

மன்னார்

மன்னார் மாவட்ட திலீபன் மருத்துவ சேவையினருடன் இணைந்து தமிழீழ சுகாதார சேவையினர் மழைகால தொற்று நோய்களில் இருந்து விடுபடல் தொடர்பாகவும், வாய்ப்புற்று நோயை முன்கூட்டியே இனம் காணல் தொடர்பாகவும் தொடர் கருத்தரங்குகள் நடத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 10 ஆம் திகதி சின்னவலையகட்டு அ.த.க.பாடசாலையிலும், 15 ஆம் திகதி கறுக்காய்க்குளம் மாதர் சங்கத்திலும் மக்களை ஒன்று கூட்டி விளக்கமளிக்கப்பட்டதுடன்வாய்ப்புற்று நோயினை இனம் காண்டு அதற்கான சிகிச்சையும் வழங்கப்பட்டது.

## கட்டைக்காட்டு புளியங்குளம் பஸ் சேவைகள் ஆழியவளையிலிருந்தே நடைபெற்றன

கட்டைக்காடு

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி கடற்கரை வீதியில் நீர் தேங்கி நிற்பதுடன், வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளது. இதனால் கட்டைக்காடு - முகமாலை, கட்டைக்காடு - புளியங்குளம் பஸ் சேவைகள் கடந்த இரண்டு நாட்களாக ஆழியவளையிலிருந்தே நடைபெற்றது.

இதன் காரணமாக கிழக்கு கெல்லை கிராமங்களிலுள்ள பொதுமக்கள், நோயாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் 12 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே பஸ் மூலம் பிரயாணத்தைத் தொடரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி உரிய முறையில் திருத்தப்படாமையால் கடந்த பல வருடங்களாக தமது போக்குவரத்துத் துண்டிக்கப்படுவதாகவும், தாம் நடந்து சென்றே பிரயாணத்தைத் தொடர்வதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (21)

## புலிகளின்குரல் 15 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

கிளிநொச்சி

புலிகளின் குரல் வானொலியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா 'வானோசை -15' நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெறவுள்ளது.

பண்பலை 98 அதிர்வெண்ணிலும் www.pulikalinkural.com என்ற இணையத்தளத்தினூடாகவும் புலிகளின்குரல் ஒலிக்கும் நேரங்கள்- தாயகமொழியில் காலை 6.30 மணிமுத் 9 மணி வரையும், சிங்க மொழியில் பகல் 11 மணிமுதல் 11.30 மணிவரையும், இரவு 9.30 மணி முதல் 10 மணிவரையும் இணையத்தளத்தில் 24 மணித்தியாலங்களும் கேட்கலாம்.



அக்கராயன் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தால் வன்னேரியில் அமைக்கப்பட்ட மக்கள் கடையை சங்கத் தலைவர் வே.விஜயரத்தினம் நாடாவை வெட்டி திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

## சுகாதார சேவையினரால் தெற்றுநோய் கருத்தரங்கு

கிளிநொச்சி

இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் மழைகால தொற்று நோய் தொடர்பான கருத்தூட்டல் தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்கு படுத்தலில் கடந்த புதன்கிழமை 8.35 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்,

காலை 11.30 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும், மத்தியம் 1.30 மணிக்கு சேரன் தொழிலக ஊழியர்கள், பணியாளர்களுக்கும் மழை கால நீர் ,உணவு தொற்று நோய்கள் காவிகளால் பரவும் டெங்கு காய்ச்சல், மலேரியா தொடர்பான கருத்தூட்டல் வழங்கப்பட்டது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**நவம்பர் - 18**

1626: ரோம் நகரில் சென் பீட்டர்ஸ் தேவாலயம் திறந்து வைக்கப்பட்டது.

1901: அமெரிக்காவும் பிரித்தானியாவும் கப்பல் போக்குவரத்து கால்வாய் உடன்படிக்கையான இரண்டாவது ஹேபௌன் ஃபோட் உடன்படிக்கையில் ஒப்பமிட்டன. முதலாவது ஹேபௌன் ஃபோட் உடன்படிக்கையை பிரிட்டன் ஏற்றுக் கொள்ள மறுத்த நிபந்தனைகளை இரண்டாவது உடன்படிக்கையில் ஏற்றுக் கொண்டது.

1903: அமெரிக்காவுக்கும் பனாமா குடியரசுக்கும் இடையே பனாமா கால்வாய் அமைப்பது தொடர்பில் உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைக்கு ஹே - போனோ - வரில்லா உடன்படிக்கை என்று பெயர்.

1918: லாட்வியா சுதந்திரக்குடியரசு நாடானதாக அறிவித்தது.

1919: லாட்வியா தலைமைத்தளபதி பலோடிஸ் ஜேர்மனியின் போர் நிறுத்த வேண்டுகோளை நிராகரித்தார்.

1928: அமெரிகாவில் மிக்கி மௌஸை மையமாகக் கொண்டு ஸ்டீம் போட் வில்லி என்னும் முதல் கார்ட்டூன் பேசும் படம் திரையிடப்பட்டது.

1935: எதியோப்பியா மீது இத்தாலி படை எடுத்ததைத் தொடர்ந்து சர்வதேச சங்கம் இத்தாலி மீது பொருளாதாரத் தடை விதித்தது. இத்தாலி பதிலடியாக இத்தீர்மானத்தில் பங்கு கொண்ட நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டது.

1945: ஈரானில் அஸர்பெய்ஜான் நகரில் கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவுடன் ஒரு குழுவினர் புரட்சி செய்ய ஆரம்பித்தனர். அரசுப்படையினர் அதனை அடக்க முற்பட்டபோது அங்கிருந்த சோவியத் படையினர் தடுத்து விட்டனர்.

1951: எகிப்து முழுவதும் பிரிட்டிஸ் படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், மோதல்களும் ஆரம்பித்தன. எகிப்திய பொலிஸாருக்கும், பிரிட்டிஸ் படையினருக்கும் இடையே பல இடங்களிலும் மோதல்கள் வெடித்தன.

1956: போலந்து பிரதமர் ரஷ்ய பிரதமருடன் ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். இந்த ஒப்பந்தப்படி ரஷ்யா போலந்துக்கு அதிக சுதந்திரம் வழங்குவதாகவும், அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது எனவும் பழைய கடன்களை ரத்துச் செய்வதாகவும், ரஷ்யப் படைகளைக் குறைத்துக் கொள்வதாகவும் ரஷ்யா உடன்பட்டது.

1962: நவீன அணுப் பௌதீகவியலின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும் 1922 இல் பௌதீகவியலுக்கான நோபல் பரிசை பெற்றவருமான நீல்ஸ்போர் மரணமடைந்தார்.

1963: பெல் தொலைபேசிக் கம்பனியினரால் இலக்கங்களை அழுத்தி தொடர்பினை மேற்கொள்ளும் தொலைபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1972: இந்தியா புலியை தனது நாட்டின் தேசிய விலங்காக அறிவித்தது.

1973: அச்சமே நோய் அச்சம் தவிர்த்தால் நோய் அகன்று விடும் என்று அருளிய இந்திய புதுவை அரவிந்தா ஆசிரம அன்னை மகா சமாதி அடைந்தார்.

1977: எகிப்திய அதிபர் அன்பவர் சதாத் - இஸ்ரேல் பிரதமரது அழைப்பை ஏற்று ஜெருசலம் சென்றடைந்தார். வரலாற்றுப் புகழ் பெற்ற பயணம் இது எனக் கருதப்படுகிறது.

1994: தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா நிலமீட்புச் சட்டம் என்ற ஒரு புதிய சட்ட மூலத்தை ஒப்பமிட்டு அமுலுக்கு கொண்டு வந்தார். இந்தச் சட்டப்படி நிற வெறிக் கொள்கையின் கீழ் கறுப்பினத்தவர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீது கறுப்பினத்தவர்கள் உரிமை கோர வழி ஏற்பட்டது.

1995: இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட நவீனரக போர் விமானம் ஒன்று இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

2001: தலிபான்களது பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் ஐந்து வருடங்களுக்கு பிறகு தொலைக்காட்சிச் சேவை ஆரம்பமாகியது.

தொகுப்பு :- சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

திருக்குறள்

## நமது நோக்கு

### புறக்கணிக்கப்பட்ட தேர்தலும்; அது உணர்த்தியுள்ள செய்திகளும்!

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு தமது ஒருமித்த தமிழ்த் தேசியத்திற்கும், தேசியத்தலைமைத் துவத்திற்குமான ஆதரவை வெளிப்படுத்தி தங்களது உறுதியான அரசியல் - கருத்தியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி தென்பகுதி சிங்கள பௌத்த மக்களையும், சர்வதேச சமூகத்தையும் புருவங்களை உயர்த்தி சிந்திக்கவும், பிரமிக்க வைத்தார்களோ அதேபோன்று, நேற்று நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்கள் தமது கொள்கையில் தாம் உறுதியாக இருப்பதை மீண்டும் உணர்த்தும் வகையில் செயற்பட்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

தங்களுக்கு எந்த வகையிலும் நன்மை செய்யும் மனப்பாங்கற்ற, தங்களின் அரசியல், வாழ்வியல், சமூகவியல் மற்றும் மனிதவியல் உரிமைகளை அங்கீகரித்து, மதிப்பளித்து, கௌரவிக்கும் ஜனநாயக மற்றும் தார்மீக சிந்தனையற்ற ஒரு சிங்கள ஆட்சித்தலைமையை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை அவர்கள் நிராகரித்து, வாக்களிக்காது விட்டதன் மூலம் தமது எதிர்ப்பினை முழுமையாகத் தெரிவித்துள்ளமையானது சர்வதேச சமாதான சமூகத்தை சிந்திக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை.

தாங்கள் ஏன் தேர்தலைப் பகிஷ்கரிக்கின்றனர் என்பதற்கு தெளிவானதும், நியாயமானதுமான விளக்கங்களை தமிழ் மக்கள் அறிக்கைகளாகவும் அறிவிப்புக்களாகவும், அறை கூவல்களாகவும் ஓங்கி ஒலிக்கச் செய்துவிட்டே தேர்தலைப் புறக்கணித்துள்ளார்கள் என்பதே கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

அவர்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலை மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் ஜனாதிபதியையும்கூட நிராகரிப்பவர்களாகவே இருப்பார்கள் என்பதையும் அவர்களின் இன்றைய அரசியல் சிந்தனைப்போக்கினைப் புரிந்து கொண்டவர்கள் உணரவே செய்வர்.

குடாநாட்டில் இன்று நிலவிய அமைதியும், சந்தடியற்ற சூழலும் தமிழ் மக்கள் மனதில் உள்ள ஏக்கத்தை, கோபத்தை, வெறுப்பை மற்றும் இலங்கையின் ஆட்சியாளர் மேலுள்ள கடும் சினத்தையும்கூட வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

மக்களே செல்லாத வாக்களிப்பு நிலையங்களும், அங்கிருந்து வாக்குப்பெட்டிகளும், அதனைச் சுற்றியிருந்த தேர்தல் அதிகாரிகளும், அதனைக் கண்காணிக்க வந்தவர்களும், அவர்களுக்கெல்லாம் காவலாக ஆயுதப்படையினரும் - பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்த காட்சி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சில உண்மைகளை உணர்தியே இருக்கும்.

அதாவது, தமிழ் பேசும் மக்கள் இனிமேலும் சிங்கள தேசத்தின் ஜனநாயக சர்வதிகாரத் தலைமையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதையும், அவர்கள் தமக்கான ஒரு வலிமையான தலைமையைக் கொண்டிருப்பதையும் இந்தப் பகிஷ்கரிப்பின் மூலம் உணர்த்தியுள்ளார்கள். ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளதாகக் கூறிக் கொண்டு ஆயுத பாணிகளாக, ஆயுதப் படையினருக்கு துணைப்படையாக இயங்கும் எந்தவொரு தமிழ்க் குழுக்களையும் தாங்கள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அவர்கள் இத்தேர்தலின் மூலம் சிங்களத் தலைமைகட்கும், சர்வதேசத்திற்கும் உரத்துத் தெரிவித்துள்ளார்கள்.

- அதுமட்டுமல்ல, தமது உரிமைகளுக்காகவும், தமது விடுதலைக்காகவும், தமது தேசியத் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காகவும் ஆயுத ரீதியில் மட்டுமல்ல, சாத்வீக ரீதியிலும் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைந்து போராட உறுதி பூண்டுள்ள தம் மன உறுதியையும் அவர்கள் இந்தப் பகிஷ்கரிப்பின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

சில வாக்குச்சாவடிகளில் ஆங்காங்கே உதிரிகளாகச் சல வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அந்த வாக்குகள் என்ன உணர்வுடன், எந்தப் பின்னணியில், எத்தகைய அழுத்தத்தின் கீழ் போடப்பட்டன என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இதேவேளை - இன்று மாலைக்குள் பெரும்பாலும் இலங்கையின் புதிய ஜனாதிபதி யார் என்பது தெரிவாகிவிடும். தெரிவாகும் ஜனாதிபதி வழமைபோல் சமாதானம், பொருளாதார அபிவிருத்தி, வாழ்க்கைத்தர உயர்வு என்று பல தத்துவங்களைப் பேசுவார்.

மல்வத்தை, அஸ்கிரிய, களனி மற்றும் ஏனைய பீடாதிபதிகளிடம் ஆசி பெறுவார். அவர்கள் ஆசியுடன் ஆலோசனைகளையும் வழங்குவார்கள், அதன் பின்னர் மீண்டும் வழமையான தமது பேரினவாத சிந்தனையுடன் செயற்பட ஆரம்பிப்பார்.

பழைய வரலாறு மீண்டும் மெல்ல மெல்ல ஆரம்பமாகும்.

இதனைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தே உள்ளதால், அவர்கள் ஏமாற்றமடையப் போவதில்லை. சிங்கள ஆட்சித் தலைமைகள் அவர்களுக்கான சலுகைகளை, உரிமைகளாக வழங்கவே தொடர்ந்தும் முயற்சிக்கும். அதற்கே சமாதான முயற்சி என்று பெயரிடும்.

ஆனால், தமிழ் மக்கள் இனிமேலும் இவர்களின் வார்த்தை ஜாலங்களை நம்பி ஏமாறுவார்கள் என எவரும் நம்பினால், அது அவர்களின் அரசியல் தெளிவின்மையையே வெளிப்படுத்துவதாக அமையும்.

தமிழர்கள் தமக்கான அரசியலை, தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழி, அதனைப் பெற்றுத்தரக் கூடிய ஆளுமை மிக்க தலைமையை உறுதியாகப் பற்றிக்கொண்டு செயற்படத் தொடங்கி வெகு காலமாயிற்று.

இந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்த அவர்களின் அணுகுமுறை அதனை மீண்டும் வலியுறுத்தி தெரிவித்துள்ளது என்பதே இன்றைய பிரதான செய்தியாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



## மாவீரர் நாள் நவம்பர் - 27.2005

"மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திர சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்"

- தமிழீழத் தேசியத் தலைவர் -

### நாடும் நடப்பும்




## இதுவரை தமிழர் ஜனநாயகத்துக்கு வாக்களித்து கண்டபயன் என்ன?

ஜனாதிபதியாக யார் தெரிவுசெய்யப்படுவார் என்ற கேள்விக்கு இன்று காலையில் மக்கள் இந்தப் பத்திரிகையைப் பார்க்கும்போது விடையைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். தேர்தல் என்றாலே தில்லுமுல்லுகள் நடக்காமல் இருக்குமா? இந்தத்தில்லு முல்லுகள் பற்றிய சில சங்கதிகள் நாள் போகப் போகத்தான் தெரியவரும். சில தெரியாமலேயே போகும். மற்றும் சில நீதிமன்றத்துக்குப் போனால் வெளியேவரலாம். சில வெளியே தெரியாமலேயே போகவும் கூடும் என்று நண்பர் பரமசிவம் காலையில் ஒரு வட்டம் அடித்துவிட்டு வந்துசொன்னார்.

காலையில் நான் ஒரு தேநீர் குடிப்பதற்காக வெளியே போனேன். ஒரு தேநீர் கடைகூடத் திறந்திருக்கவில்லை. சாப்பாட்டுக் கடையையே நம்பியிருக்கும் சிலர் ஆலாய்ப் பறந்து கொண்டிருந்தனர். கடையடைப்பு கர்த்தால் என்று எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்பொழுது சாப்பாட்டுக் கடைகளுக்கும், மருந்துக் கடைகளுக்கும் கொஞ்சம் சலுகை அளித்தால், நல்லது என்று நண்பர் சொன்னார். இது நல்ல யோசனைதான் என்று மற்றொருவர் ஆமோதித்தார். நல்ல நோக்கத்துடன் இப்படி சாப்பாட்டுக் கடைகளுக்கும் சலுகை அளித்தால் அதை நம்மவர் சிலர் வேறு விதமாகப் பயன்படுத்தி நோக்கத்தையே கெடுத்துவிடுவார்கள் என்று மற்றொருவர் சொன்னார். இந்தியாவில் கர்த்தால் கடையடைப்பு எல்லாம் பகலில் தான் நடக்கும். மாலை 5 மணியுடன் கடையடைப்பும் கர்த்தாலும் முடிந்துவிடும். 5 மணிக்குப் பின்னர் கடைகள் திறந்து வியாபாரம் நடக்கும் என்று வேறொருவர் சொன்னார். அங்கே நடக்கும் போராட்டங்களும் வேறுவிதமானவைதானே. சினிமாவுக்குப் பெயர் வைப்பதிலும், சினிமா நடிகை பெண்களின் கற்புப் பற்றிப் பேசியதற்காகவும் தானே இப்பொழுது அங்கே போராட் டம் நடக்கிறது. அவற்றோடு நமது போராட்டங்களைப் பற்றியும் பேசலாமா? என்று இன்னொருவர் கேட்டார். இவற்றை நான் பரமசிவத்திடம் சொன்னேன்.

இருதரப்புமே நிறையப் பொய் வாக்குறுதிகளை அள்ளிக் கொட்டி இருக்கின்றன. ஊடகங்களிலும் பொய்ச் செய்திகளும், பொய்த் தகவல்களும் தாராளமாக இடம் பெற்றிருக்கின்றன. எவர் வெற்றிபெற்றாலும், பொய்தான் வெற்றி பெற்றிருக்கிறது என்று தயக்கமின்றிச் சொல்லலாம் என்று பரமசிவம் சொன்னார்.

போர் நிறுத்தத்தைக் கொண்டுவந்து சிங்களவர்களும் தமிழர்களும் நாட்டின் எந்தப் பகுதிக்கும் தடை இல்லாமல் பயணம் செய்வதற்கும், வியாபாரம் செய்வதற்கும், அமைதி நிலவுவதற்கும் ரணில் விக்கிரமசிங்க தானே வழிவகுத்தார். அவருக்கு வாக்களித்தால் என்ன என்று ஓரன்பர் நேற்று நண்பகலின் போது இன்னொருவரிடம் கேட்டார். நீர் சொல்லுவது சரியென்று வைத்துக்கொண்டாலும், துரதிஷ்ரம் பிடித்த மாதிரி முன்னாள் மகாவலி அமைச்சர் காமினி திஸநாயகவின் மகன் நவின் திஸநாயகவும், ரணிலின் வலது கையான மிலிந்தமொறகொடவும் நாகாக்கத் தெரியாமல் உளறிக்கொட்டி உடன் பிறந்தே செல்லும் வியாதிகளாக விடிந்துவிட்டார்கள். போதாக்குறைக்கு மகாநாயக்க தேரர்களும் கடைசி நேரத்தில் ஒற்றையாட்சிக்கு ஆதர வழித்து, ஓதித்தள்ளிவிட்டார்களே என்று மற்றவர் பதிலளித்தார். இவரிடம் முதல் கேள்வியைக் கேட்ட அன்பர் - இச் சமயம் என்னைப் பார்த்துவிட்டார். உடன் என் பக்கம் திரும்பி நாங்கள் இன்னமும் ஜனநாயக நாட்டிலே தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதியைக் கொண்டு எங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு வழி காண முடியாதா? என்று கேட்டார்.

நீர் சொல்வது நியாயம் என்று வைத்துக்கொண்டு உமக்கு நான் பதில் சொல்ல வேண்டியது அவசியம். இலங்கை சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டில் முதல் கூடிய நாடாளுமன்றத்துக்கு 1947 ஆம் ஆண்டில் நடந்த முதல் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் டி.எஸ் சேனநாயகா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியில் தமிழர்களும் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். யாழ்ப்பாண நகரத் தொகுதியில் சேர்.பொன் அருணாசலத்தின் மகன் மகாதேவாவும் காங் கேசன் துறைத் தொகுதியில் சேர்பொன் இராமநாதனின் மருமகன் தமிழறிஞர் சு.நடேசபிள்ளையும் போட்டியிட்டனர். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இந்த தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றது. மகாதேவாவும் நடேசபிள்ளையும் தமிழ்க் காங்கிரசிடம் தோல்வியடைந்தனர். ஓராண்டின் பின்னர் காங்கிரசிலிருந்து செல்வநாயகம் மற்றையோரும் வெளியேறி இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தனர்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் மற்றும் சிலரும் சேனநாயகா அமைச்சரவையில் சேர்ந்து ஒத்துழைத் தனர். அன்று தொடக்கம் இன்றுவரை காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசுகளுடன் ஒரு தமிழராவது சேர்ந்து ஒத்து ழைத்துத்தான் வந்திருக்கின்றனர். ஆட்சியிலிருந்த அரசாங் கங்களுக்குத் தமிழ்க் கட்சிகள் ஒன்றாவது ஒத்துழைப்புக் கொடுத்து வந்திருக்கிறது. ஆனாலும் சிங்களக் கட்சிகள் ஆட்சியிலிருந்ததற்கும் அந்த அரசுகள் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கும் சிங்கள மக்களின் தேவைகளை நிறைவேற்று வதற்கும் இந்தத் தமிழர்களும் தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுத்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றினார்களேயொழிய தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கோ, தேவைகளை நிறைவேற்று வதற்கோ, நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையாவது நிறை வேற்ற முடிந்ததா? 1956 ஆம் ஆண்டில் சந்திரிகாவின் தகப்பன் பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் மசோதாவைக் கொண்டுவந்த போது- தமிழர் தாயகமான வடக்கிலும் - கிழக்கிலும் இருந்து நாடாளுமன்றத்துக்குச் சென்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து எதிர்த்து வாதாடி, எதிர்த்து வாக்களித்த போதிலும் அந்த மசோதாவை நிறைவேற்றாமல் தடுக்க முடியாது போய் விட்டது அந்தக் காலத்திலும் சரி, அதன் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியிலும் சரி ஜனநாயக முறையில் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு பிரேரணையையாவது நிறைவேற்ற முடிந்ததா?

தமிழர் தாயகத்தில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுத்த உதவிகளைக்கூடப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு இனவாதக் கட்சிகள் தடையாக இருந்த போது கூட தமிழ் பேசும் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், ஆளும் கட்சிக்கு ஒத்துழைப்புக் கொடுத்தும் கூட நாடாளுமன்றத்தில் அதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே இந்த நிலையில் ஜனநாயகம் என்று சொல்லிக்கொள்வதனாலும், தேர்தலில் வாக்களிப்பதாலும் இந்தத் தேர்தலில் வாக்களித்து ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதிலும் அர்த்தம் இருக்கிறதா? என்று கேட்டேன்.

நீர் சொல்வது சரிதான் என்று அந்த அன்பர் சொல்லவும், பரமசிவமும் ஓம் ஓம் என்று தலையாட்டியபடியே நாளை சந்திப்போம் என்று நடந்தார்.




# தேர்தலின் பின்னராவது முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைவார்களா?

இந்தக் கட்டுரையைப் படிக்கும் பொழுது சிங்களத்து மக்கள் தாங்கள் ஆட்சித்தலைவராக யாரை தெரிவு செய்துள்ளார்கள் என்பது ஓரளவுக்குத் தெரிந்திருக்கும். இன்று மாலைக்குள் அது யார் என்பது ஊர்ஜிதமாயிருக்கும்.

எவர் சிங்களத்தின் ஆட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், தமிழ் பேசும் மக்களுக்குப் பயன் ஏதுமில்லை என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் தமிழ் பேசும் மக்கள் அதாவது தமிழ் - முஸ்லிம் மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காக ஒற்றுமையுடன் ஓரணியாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

தமிழ் மக்கள் பிளவுபடாமல் ஒற்றுமையாக உள்ளார்கள். ஆனால், முஸ்லிம் மக்கள் இந்தத் தேர்தலிலும் பிளவுபட்டுத்தான் இருந்துள்ளார்கள். முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகள் இவ்வாறு பிளவுபட்டிருந்ததால், மக்களும் பிளவுபட்டிருந்தார்கள். இந்தப் பிளவு தொடரக்கூடாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியை ஆதரித்தவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தவர்களும் தேர்தலின் பின்னராவது தங்கள் வேறுபாடுகளைக்களைந்து, ஓரணியாக ஒற்றுமைப்படுவது காலத்தின் தேவையாகும். இவ்வாறு ஒற்றுமைப்பட்ட முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாகினால் தமிழ்பேசும் மக்களின் விடுதலை விரைவுபடும். தமிழ்பேசும் மக்களின் விடுதலை என்பது தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் விடுதலையையே குறிக்கும். தமிழ் மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் அனைத்தும் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்கும்.

இது பற்றித் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இரா. சம்பந்தன் சில நாள்களுக்கு முன்னராக தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றில் கூறிய கருத்துகளை இங்கு தெரிவிப்பது பொருத்தமானதும், அனைவரின் சிந்தனைக்கும் உரியதுமாகும்.

முஸ்லிம் மக்களின் பலம் அவர்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம்களின் தாயகம் வடக்கு - கிழக்குப் பகுதியே. தமிழ் மக்களின் தாயகமும் வடக்கு - கிழக்குப் பகுதியே. தமிழ் மக்கள் ஒற்றுமையாக உள்ளனர். முஸ்லிம்கள் மூன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றனர். இதற்கு முடிவு கட்டி, முஸ்லிம்கள் ஒற்றுமைப்படவேண்டும். தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் பிரித்தாளும் வகையில் சிங்களத்தலைவர்கள் இது வரை நடந்து வந்துள்ளார்கள். இனி மேலும் அவ்வாறுதான் அவர்கள் தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைப்பதில் பல முயற்சிகளை மேற்கொள்வார்கள். ஒரே தாயகத்தில் வாழுகின்ற மக்கள் இதனை முறியடித்து, ஒற்றுமைப்படவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஒரு பகுதி யினர் அமைச்சர்களாகவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் மறுபகுதியினர் அமைச்சர்களாவதும் இன்று முஸ்லிம் தலைவர்களிடையே இருக்கும் பொதுவான அம்சமாகும். அமைச்சர்களாகும் எண்ணத்தைக் கைவிட்டு, இனத்தின் உரிமைகள் பற்றிய சிந்தனை உள்ளத்திலே முதலிடம் பெறுமானால், ஒற்றுமை சுலபமாக ஏற்படும். தற்போது நாடாளுமன்றத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகளைச்சேர்ந்த 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் மூவர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கூடத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழ் மண்ணிலிருந்து தெரிவானவர்கள் என்பதையும் கவனிக்கவேண்டும்.

வேறொருவர் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தப்பித்தவறித் தெரிவானவர். அவரை விட்டு அனைத்துத் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் ஏன் செயல்படமுடியாது? ஆளும் சிங்களக் கட்சிகளுடன் சேர்ந்து அமைச்சர்களாவதில்லை என்று முடிவெடுத்தால் இது சுலபமாக நடக்கும். மேலும் ஒன்றை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் ஏன் எவ்வாறு இனவிகிதாசாரம் மாறுபட்டது? இதற்குக் காரணம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தானே. இது மட்டுமல்ல, முஸ்லிம்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப முஸ்லிம்களுக்கு காணி விகிதாசாரம் கிடையாது. ஆனால் சிங்கள விகிதாசாரத்திலும் பார்க்க அவர்களுக்குரிய காணி விகிதாசாரம் மிகஅதி கம். இந்த ஆபத்தை எவ்வாறு எதிர்கொள்வது என முஸ்லிம் தலைவர்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். தந்தை செல்வா தொடக்கத்திலிருந்தே இந்தக் குடியேற்றத்தைத் தடுப்பதிலேயே அதிக அக்கறை காட்டினார். எழுதிய ஒப்பந்தங்களில் இதற்கு முன்னுரிமை கொடுத்தார் என்று சம்பந்தன் விளக்கியதுடன், இன்றைய நிலைமையையும் எடுத்துகூறியிருந்தார்.

அடக்கப்பட்ட ஓர் இனம் உரிமைக்காகப் போராடும் பொழுது, வேறொரு இனத்தைத் தான் அடக்கி ஆழ நினைக்கக்கூடாது. தமிழினம் உரிமைக்குப் போராடும் பொழுது, முஸ்லிம் இன மக்களை அடக்கிவைக்க நினைப்பதாக எவரும் தப்பாக நினைக்கக் கூடாது. தந்தை செல்வா தமிழரசுக்கட்சி என்று தொடங்கிப் போராட்டங்களை நடத்தியது, தமிழ் மக்களுக்காக மட்டுமல்ல, முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவுமே தமிழரசுக்கட்சி போராட்டங்களை முன்னெடுத்தது. இன்று தலைவர் பிரபாகரனின் போராட்டமும், தமிழ் பேசும் மக்களின் தாயக விடுதலைக்கான ஆயுதப்போராட்டமேயாகும் தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகம் தமிழீழம் எனப்படும் பொழுது, தாயக விடுதலை என்பது இரு சமூகத்தினரது விடுதலையையும் அடக்கியதே. புலிகளின் ஆயுதபலம் தான் சர்வதேசத்தின் நெருக்குதல்களைச் சிங்கள அரசுக்குக் கொடுத்துப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வழியேற் படுத்தியது. புலிகளை வெல்லமுடியாது என்று சர்வதேசம் சிங்கள அரசுக்கு விளங்கப்படுத்தியது. பேச்சுவார்த்தை எனப்படும் பொழுது ஆயுதங்களுடன் பலமாயும். பேச்சுவார்த்தை பயனளிக்காவிட்டால், ஆயுத பலத்தை மீண்டும் காட்டலாம். எனவே, ஆயுதமற்ற நிலையில் பேச்சுவார்த்தை தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமையாது என்பதை மறக்கக்கூடாது. அது மட்டுமல்ல புலிகள் பலமான நிலையில் இருக்கும் வரை தான் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் உரிமைகள் பற்றிப் பேசமுடியும். அல்லாது விட்டால், சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் - முஸ்லிம் மக்களைப் பற்றிக் கவலை கொள்ளாது. தன் ஆக்கிரமிப்பைத் தீவிரப்படுத்தும் என்று சம்பந்தன் விளக்கிக்கூறி தமிழ் - முஸ்லிம் உறவின் ஒற்றுமையை வலியுறுத்தினார். இதில் பங்குபற்றிய இரு முஸ்லிம் பிரமுகர்களும் இவரது இந்தக் கருத்துகளை முழுமையாக ஏற்றுக் கொண்டனர். தேர்தலின் பின்னராவது முஸ்லிம தலைமைகளும் ஒன்றிணைந்து தமிழ் பேசும் மக்களின் அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்க உழைக்க வேண்டும்.


**மாசிலன்**

# இந்தவார கிரகபலன் 18.11.2005 - 24.11.2005

| ராகு | செவ் | சந் | |
|---|---|---|---|
| யுரே | 18 ப.02-15 மிது-சந்<br>20 இ.12-08 கட-சந்<br>23 ப.12-23 சிங்-சந் | | சனி |
| நெப் | | | |
| சுக் | சூ புத | குரு | கேது |

## மேடம்

(அசுவினி, பரணி, கார்த்திகை1ஆம் கால்)



மேடராசியில் பிறந்த குடும்பத்தவர்களுக்கு கணவன் மனைவி ஒற்றுமை வளரும். புத்திரர்களால் நன்மை உண்டு. தொழில் வருவாய் என்பன திருப்தியாக இருக்கும். வீட்டில் சந்தோசக் கொண்டாட்டங்கள் நிகழும். தேக சுகம் பாதிப்படையாமல் நன்றாக இருக்கும் விவாக சுபகருமங்கள் மிக விரைவில் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் பிரச்சினை இருக்காது. சக தொழிலாளருடன் ஒற்றுமை வளரும். அதிகாரிகளும் ஒத்துழைப்பு நல்குவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக அமையும். வாடிக்கையாளர்களின் வரவு கூடுதலாக இருக்கும். இரும்பு வியாபாரிகள் அதிகம் லாபமடைவர். தொழிலாளர்களுக்கு தொழிலில் ஊக்கமும், வருவாயும் நன்று. மாணவர்களுக்கு முன்னேற்றமும் பராட்டுகளும் உண்டு.

## இடபம்

(கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவியிடையே அந்நியோன்னிய ஒற்றுமை ஏற்படும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். புத்திரர்களால் மகிழ்சியும், நன்மையும் உண்டு. வெளிநாட்டிலிருந்து பண உதவி வந்துசேரும். மங்கள விஷயங்கள் கைகூடி, புதிய வாழ்வு ஆரம்பிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வரவேற்பு பிரமாதமாக இருக்கும். பதவி உயர்வு வசதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் வெகு சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்கள் நல்ல முன்னேற்றமடைவர். பலரது பாராட்டுக்களையும் பெறுவர்.

## மிதுனம்


(மிருகசீரிடம்3,4திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அவ்வப்போது பல பிரச்சினைகள் தோன்றும். இனபந்துக்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். தொடங்கும் கருமங்களில் தடை தாமதங்கள் உண்டாகும். புத்திரர்களால் பல தொல்லைகள் ஏற்படும். தேகசுகம் பாதிக்கப்படும். வைத்தியச் செலவும் கூடுதலாக இருக்கும். விவாகக் கருமங்கள் தாமதத்தை உண்டாக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். எவ்வளவு முயன்று வேலை செய்தாலும், அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமைக் குறைவு தோன்றும். பிரச்சினைகளும் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் நாட்டமின்றிக் காணப்படுவர்.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் கால் பூசம் ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு சீராக இருக்கும். கணவன் மனைவி நல்லுறவுவளரும். தொழிற்துறை சிறப்படையும் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் வழியால் மகிழ்ச்சியும், பொருள் வரவும் கிட்டும். நினைத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். விவாக சுபகருமங்கள் நிறைவேறி மணமக்கள் புதுவாழ்வை ஆரம்பிப்பர். உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றங்களும், சக ஊழியரின் ஒத்துழைப்பும் கிட்டும். அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஊதிய உயர்வும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர் கூடுதலாக வருவர். புதிய முதலீடுகளுக்கும் நன்று. தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் கிட்டும். வருவாய் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வி முன்னேற்றமடைவர். சிலருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

## சிங்கம்

(மகம், பூசம், உத்தரம்1 ஆம் கால்)



சிங்க ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு விருத்தியாகும். இனபந்துக்களிடையே நல்லுறவு தென்படும். புத்திரர் வழி உதவிகள் கிடைக்கும். பொருள் வருவாய் திருப்தியாக இருக்கும். தேகசுகம் அதிகம் பாதிக்காது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும், வேலைப்பளு கூடிக் கொண்டே இருக்கும். சக ஊழியரின் உதவியுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். வாடிக்கையாளர் தொகைகூடும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுவாகும். வருவாய் அதிகரிக்கும். மாணவர்கள் முயற்சிக்கு ஏற்றவாறு முன்னேற்றம் காண்பர்.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)



கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமை, நல்லுறவு வளரும். தொழில் துறையும், வருமானமும் சிறப்படையும். புத்திரர் வழியில் உதவியும், பண வரவும் உண்டு. வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம். மங்கள நிகழ்வுகள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகள் கூடினாலும், சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். அதிகாரிகளின் பாராட்டுகள் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் அடையும். கடன் பாக்கிகளும் வந்து சேரும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமும், பரீட்சைகளில் சித்தியும் அடைவர்.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம், 1,2,3)



துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் தோன்றும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். தேகசுகம், குடும்ப சுகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். தொடங்கும் கருமங்கள் கால தாமத்தையும், இடைஞ்சல்களையும் ஏற்படுத்தும். குடும்பத்தில் வருவாயிலும் பார்க்க, செலவுகள் அதிகரிக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. மங்கள கருமங்கள் காலவரையின்றி இழுபடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் பல பிரச்சினை ஏற்படும். அதிகாரிகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை குறையும். வேலை வாய்ப்புக்களும் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் கூடிய முயற்சி தேவை.

## விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)




விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லிணக்கம் ஏற்பட்டாலும், இடையிடையே கருத்து வேற்றுமைகளும் இருக்கும். பொருள் வரவு இருந்தாலும், என்றும் பற்றாக்குறை நிகழும். தேக சுகம் பாதிப்படைந்தாலும், விரைவில் சுகம் ஏற்படும். கருமங்களை ஆற்றுவதில் அலைச்சல் ஏற்படும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின்மேல் நிறைவேறும். மங்கள கருமங்கள் காலதாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகளால் நெருக்கடி அதிகரிக்கும். சக உதவிகள் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு முயற்சிக் கேற்ப வியாபாரம் நடக்கும் நடக்கும். கடன் வியாபாரங்களைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்குப் பல சிக்கல்கள் தோன்றினாலும், அவை விரைவில் சரியாகும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் வேண்டும். முயற்சிக்கேற்ப முன்னேற்றமுண்டு.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால்)



தனுசுராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இனபந்துக்களின் வரவும், கொண்டாட்டங்களும் அதிகரிக்கும். குடும்ப உறவு சந்தோசமாக இருக்கும். கணவன் மனைவியிடையே அந்நியோன்ய உறவு தென்படும். புத்திரர், சகோதரர்களின் உதவி கிடைக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். நிதிநிலைமை சீராக இருக்கும். குடும்பப் பெண்கள் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள், பதவி உயர்வுகள் கிட்டும். சக ஊழியர்கள் ஒற்றுமையுடன் பணிபுரிவர். வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் நல்ல வருமானம் கிடைக்கும். பழைய நிலுவைகள் வந்து சேரும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், புத்துணர்வும், முன்னேற்றமும் தென்படும்.

## மகரம்

(உத்தராடம் 2,3,4) திருவோணம், அவிட்டம் 1,2)



மகர ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவும், மகிழ்ச்சியும் நிலவும். இனத்தவர்களின் வரவும் சந்தோஷமாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். பொருளாதார வளர்ச்சி திருப்தியளிக்கும். தேகசுகம் பாதிப்படையாது, தொடங்கும் கருமங்கள் இனிதாக அனுகூலமாகும். மங்கள கருமங்கள் கைகூட வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுதல் கிட்டும். வர்த்தகர்களுக்கு பொருள் வியாபாரம் நன்றாக இருக்கும். வங்கி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழிலில் ஆர்வமும், வருவாயும் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றங்கள் உண்டு.

## கும்பம்

(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நின்மதிக்குறைவும், சச்சரவுகளும் அதிகரிக்கும். உடல் நலம் இடையிடையே பாதிக்கும். கருமங்கள் ஆற்றுவதில் அதிக அலைச்சல் காட்டும். புத்திரர்களாலும் தொல்லைகள் அதிகமாகும். குடும்பப் பெண்களுக்கும் மன உலைச்சல் கூடுதலாகும். மங்கள கருமங்கள் இழுபறி நிலையிலிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பல நெருக்கடிகள் ஏற்படும். அதிகாரிகளும் ஒத்துழைக்கமாட்டார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதுமுக வீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கிடையில் ஒற்றுமைக்குறைவு காணும். வருவாய் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் வேண்டும்.


## மீனம்


(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி இருந்தாலும், இடையிடையே கசப்புணர்வுகளும் தோன்றும். பிள்ளைகளின் உதவிகள் உரிய நேரத்தில் வந்து சேராது. தேகசுகம் ஓரளவு நன்று. தொழில் வருவாய் இருந்தாலும், போதுமானதாக இராது. தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். கொடுக்கல் வாங்கல்களில் மிகுந்த அவதானந்தேவை. மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும், சக உதவிகளுடன் சமாளிக்கலாம். எல்லாக் கருமங்களிலும் அவதானந் தேவை. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகவே இருக்கும். எனினும் முயற்சிக்கேற்ப லாபமுண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் முன்னேற்றம் மத்திமமாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய அக்கறை காட்டினால் முன்னேற்றமுண்டு.

# தென்னிலங்கை வாக்களிப்பு - சில காட்சிகள்!


வாக்களிக்கும் முஸ்லிம் பெண் ஒருவர்



வாக்களிக்கத் தயாராகும் சந்திரசேகரன்



எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் வாக்குப்பெட்டி


மனைவியுடன் வாக்களிக்கச் செல்லும் ரணில்


மனைவியுடன் வாக்களிக்கும் மகிந்த


வாக்களிக்கும் ரணில்


வாக்களிக்கும் விமல் வீரவன்ச



## எனது வெற்றி நிச்சயம்

### - வாக்களித்த பின்னர் மகிந்த

கொழும்பு

தனது வெற்றி நிச்சயம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


மகிந்த ராஜபக்ஷ முல்கிரிகலவிலுள்ள மடமுலான ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில்தனது வாக்கைச் செலுத்திய பின்னர் உள்ளூர் மற்றும் வெளியூர் ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றி நிச்சயமானது. தற்போதைய சமாதான முயற்சிளில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதும் சகல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வுகொண்டு வரப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரிவினைவாதத்தை தோற்கடிப்பேன்!

### - வாக்களித்த பின்னர் ரணில்



கொழும்பு

தான் ஜனாதிபதியாக தெரிவானதும் பிரிவினைவாதத்தைத் தோற்கடிப்பேன் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று தனது வாக்கை கொழும்பு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் செலுத்திய பின்னர் அவர் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எனது வெற்றி உறுதியானது. ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதும் பட்டினியை ஒழிப்பதுடன், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், பிரிவினைவாதம் தோற்கடிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு - அம்பாறையில் பரவலான குண்டுத் தாக்குதல்கள்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளிலும் ஜனாதிபதித் தேர்தலின் போது - கைக்குண்டுத் தாக்குல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் இராணுவத்தினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்தனர்.

செங்கலடி மத்திய கல்லூரியில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையத்தின் மீது நேற்று நள்ளிரவு 12.10 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பொலிஸாரும், ஏழு பொதுமக்களும் காயமடைந்தனர். பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் உபுல் பண்டார (வயது 36), ஜோர்ச் பண்டார (வயது 45) ஆகியோரும், பொதுமக்களில் பகீர்தம்பி செய்நம்பி உம்மா (வயது 55), எ. எச்.அப்துல் கபூர்(வயது 28) என்ற ஆசிரியரும், அவரது மகன் அப்துல் ஜபார் மற்றும் எம். றோஷான் (வயது 14), எல்.நிர்மலா (வயது 30), எம். சுபையிர் (24), ஆர். பாலேந்திரா (வயது 20) ஆகியோர் கடும்காயங்களுக்குள்ளாகினர்.

இவர்கள் ஏறாவூர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அதேவேளை - கல்முனை பாண்டிருப்பில் அமைந்துள்ள சோமநாதர் வீதியிலிருக்கும் வீடொன்றுக்குள் நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் குண்டொன்று வெடித்ததில் கே.நிரோசன் மற்றும் எஸ்.சத்தியசீலன் (வயது 26) ஆகியோர் உயிரிழந்தனர்.

எஸ்.பிரியா(வயது 8), எஸ்.மதுசன் (வயது 2), ஆர்.சந்திரன் (வயது 38), எஸ்.விதுசியா (வயது 9), வி. ரங்கன் (வயது 9) ஆகியோர் காயமடைந்து ஆபத்தான நிலையில் கல்முனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாரிய சத்தத்துடன் இக்குண்டு அந்த வீட்டின் உள்பகுதியிலேயே வெடித்ததாகவும், வீடு பலத்த சேதத்திற்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் அக்கரைப்பற்று ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரிக்கு முன்புறமாக நடந்த கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் பாலப்பேடி சடாச்வரி (வயது 56) என்பவர் காலில் காயங்களுக்கு உள்ளான நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை- மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் 2 பொலிஸாரும், 2 ஊர்காவற்படையினரும், ஒரு பொதுமகனும் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை- காத்தான்குடியில் வாக்களிப்பு மையத்துக்கு அருகில் கூடியிருந்த மக்களைக் கலைக்க முயற்சித்தபோது பொலிஸார் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும், இரண்டு பொது மக்களும் காயமடைந்தனர்.

கல்முனை கடற்கரைவீதியில் வைத்து மௌலவி மொகமட் நசார் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 1கோடி 60 லட்சம் ரூபா யாழ். தேர்தலுக்கு செலவு!

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்கென அரசாங்கம் 1கோடி 60 லட்சம் ரூபா செலவிட்டதாக யாழ். செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முகமாலையில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கு 30 லட்சம் ரூபா செலவிடப்பட்டது.

தேர்தல் காலத்தில் மின்சாரச் செலவுகளுக்கு ஏழு லட்சம் ரூபாவும், விமானப் படையின் ஹெலி மூலம் வாக்குப் பெட்டிகளை எடுத்துவந்த செலவுக்காக 14 லட்சம் ரூபாவும் செலவிடப்பட்டதாக தெரியவருகிறது.

மொத்தமாக குடாநாட்டில் தேர்தலை நடத்த அரசாங்கம் 1கோடியே 60 லட்சம் ரூபாவைச் செலவிட்ட போதும், இந்தத் தேர்தலில் ஒரு சத வீதமானோரே வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பு நேரம் நீடிப்பு!

கிளிநொச்சி

தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நேரம் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஒன்றரை மணிநேரமாக அதிகரிக்கப்படவுள்ளது.

தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் சேவை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆசிய ஒளிபரப்பு இரவு 7.30 மணி முதல் 9 மணிவரைக்கும் - ஐரோப்பிய ஒளிபரப்பு பிரான்ஸ் நேரம் இரவு 8.30 முதல் 10 மணிவரைக்கும் நடைபெறவுள்ளது.

மாவீரர் நாளன்று ஒளிபரப்பு பிற்பகல் 5 மணிமுதல் இரவு 7.30 மணி வரை நேரடி ஒளிபரப்பாக ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளிடம் சிங்கள தலைவர்கள் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும்

### தீப்திகுமார குணரட்ண

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் முற்றாகப் புறக்கணித்துள்ளதன் மூலம் விடுதலைப் புலிகளிடமிருந்து சிங்கள அரசியல் தலைவர்கள் பாடம் கற்கவேண்டுமென்று பிரபல அரசியல் விமர்சகர் தீப்திகுமார குணரட்ன தெரிவித்தார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் மோசமாக இடம்பெற்ற வாக்களிப்புத் தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில் -

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்மக்களுக்கு விடுதலைப் புலிகள் எந்தவித அறிவுறுத்தலும் விடுக்காத நிலையில் தமிழ்மக்களின் வாக்குகளை நம்பியிருந்த ரணிலின் வெற்றியில் இந்த வாக்குவீத வீழ்ச்சி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரம் முழுவதும் தமிழ்மக்களின் வாக்குகளை நம்பியதாக இருந்தது. வடக்கு - கிழக்கு வாக்குகள் கிடைக்கும் என்று அவர் நம்பியிருந்தார். ஆனால், விடுதலைப் புலிகள் வித்தியாசமான அணுகுமுறையைக் கையாண்டுள்ளனர். அதை அவர்கள் நிரூபித்துமுள்ளார்கள்.

இந்தத் தேர்தல் மூலம் சிங்கள அரசியல் தலைவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது ஒன்றுதான் என அவர் தெரிவித்தார்.

## வர்த்தகர் சுட்டுக்கொலை!

திருமலை

திருகோணமலையில் சிங்கள வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் பேபி எனப்படும் 40 வயது மதிக்கத்தக்க வர்த்தகர் எனத் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக விசாரணையை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (04,10)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# வன்னி தேர்தல் மாவட்டத்திலும் ஜனாதிபதி தேர்தல் புறக்கணிப்பு!

வவுனியா ——

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் நேற்று ஜனாதிபதித் தேர்தலில் 20 வீதத்துக்கும் குறைவானோரே வாக்களித்ததாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களைப் போலன்றி இந்த முறை மிக மிகக் குறைவானவர்களே வாக்களிக்கச் சென்றிருந்தனர். பெரும்பாலான மக்கள் பொது அமைப்புக்கள், மாணவ சமூகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க வாக்களிப்பதைப் புறக்கணித்தனர்.

பெருமளவிலான வாக்குச் சாவடிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. சிங்கள பிரதேச வாக்காளர்களும், முஸ்லிம் வாக்காளர்களும் கணிசமான அளவில் வாக்களித்திருந்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வாக்களர்களுக்கென ஓமந்தை மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்குச் சாவடியில் விரல் விட்டெண்ணக் கூடியோரே வாக்களித்திருந்தனர். வெலிஓயா பகுதியிலும் சில நூற்றுக்கணக்கானோர் வாக்களித்திருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் மாலை மூன்று மணிவரை இருபது வீதமானோரே வாக்களித்திருந்தனர்.

முன்னெப்போதுமில்லாதவாறு மன்னார் மக்களும் வாக்களிப்பதைப் புறக்கணித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் ஹொறவப்பத்தான வீதியில் பள்ளி வாசலுக்கு அருகாமையில் சிலர் வீதிகளுக்குக் குறுக்கே ரயர்களைப் போட்டெரித்தனர். சம்பவ இடத்திற்கு பொலிஸார் வந்தபோது ரயர்களை எரிப்பதில் ஈடுபட்டவர்கள் தப்பியோடிவிட்டனர். பின்பு பொலிஸார் புல்டோசர் மூலம் எரியும் ரயர் மீது மண் போட்டு - தீயை அணைத்து வீதியில் ஏற்பட்ட போக்குவரத்துத் தடையை நீக்கினர்.

ஓமந்தைப் பகுதியிலுள்ள கொத்தணி வாக்குச்சாவடியில் வாக்களிப்பு இடம்பெற்றபோது வன்முறைகள் இடம்பெறலாம் என்று கருதப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

அரசன்குளம், சாந்தசோலைச் சந்தி ஆகிய பகுதிகளில் வீதித் தடைகளைப் போட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் விசேட அதிரடிப்படை, இராணுவம், பொலிஸ் என அனைத்துத் தரப்பினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## தமிழர் தாயகப்...

இது போன்றே வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய தமிழர் தாயகப் பகுதிகளிலும் மிகக் குறைந்தளவான வாக்குப் பதிவே இடம்பெற்றது.

தென்பகுதியில் சுமார் 75 வீதமான வாக்களிப்பு இடம்பெற்ற அதேவேளை - தமிழர் தாயகப் பகுதி மக்கள் இந்தத் தேர்தலை முற்றாக நிராகரித்து - சிங்களத் தலைமைகள் மீதான தமது நம்பிக்கையீனத்தையும், வெறுப்பையும் வெளிப்படுத்தினர்.

வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பல லட்சக்கணக்கான வாக்காளர்கள் இருந்தபோதும் அங்குள்ள மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள வில்லை.

ஒட்டுமொத்தத் தமிழர் தாயக மக்களும் இந்தத் தேர்தலைப் புறக்கணித்தமை சிங்களத் தலைமைகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே அமைந்துள்ளதென அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## கொத்தணி...

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் லட்சக்கணக்கான வாக்காளர்கள் இருந்தபோதும்- சொற்ப அளவானோரே இந்த வாக்களிப்பில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கிலும் தமிழ்ப் பகுதிகளில் மிகவும் மந்தமான வாக்களிப்பு!

மட்டக்களப்பு ——

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 44.42 வீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு மிகவும் மந்தமாகவே இடம்பெற்றது. தமிழ்ப் பகுதிகளில் 10 வீதத்துக்குக் குறைவானோரே வாக்களித்தனர். முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் பெரும்பாலாக வாக்களிப்பு நடைபெற்றது. இங்கு 70 வீதத்துக்கு மேலாக வாக்களிப்பு இடம்பெற்றது.

திருகோணமலையில் சுமார் 52 வீதமான வாக்காளர்கள் நேற்று வாக்களித்தனர். திருகோணமலையில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் தொகை 2 லட்சத்து 38 ஆயிரத்து 755 பேர் ஆகும். இங்கு 63 வீத வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள வாக்காளர் வாக்களிப்பதற்கு மூதூர் கிழக்கில் 7 கொத்தணி வாக்குச்சாவடிகள் மற்றும் ஈச்சிலம்பற்றிலும் அமைக்கப்பட்டன.

மூதூர் கிழக்கில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் தொகை 6ஆயிரத்து 179 பேர் ஆகும். ஆனால் அளிக்கப்பட்ட வாக்கு ஒன்று. அதேபோல் - ஈச்சிலம்பற்றில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் தொகை 4ஆயிரத்து 865. ஆனால் அளிக்கப்பட்ட வாக்குகள் 2 ஆகும்.

# இலங்கைத் தேர்தல் வரலாற்றிலே....

சென்ற ஈ.பி.டி.பியினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் காயமடைந்தார்.

இதேபோன்று தீவுப் பகுதியிலும் கள்ள வாக்கு அளிப்பதற்கு வாகனம் ஒன்றில் மக்களை அழைத்துச் சென்ற வேளை சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவர்களைப் படம் எடுத்தபோது - அவர்கள் அனைவரும் அங்கிருந்து சென்றுவிட்டனர். பருத்தித்துறை, தும்பளை மற்றும் உடுப்பிட்டி பகுதிகளில் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன.

இதேவேளை, தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 4 பேருந்துகள் சுழிபுரம், திருநெல்வேலி, யாழ்.நகர்ப் பகுதிகளில் வைத்து இனந்தெரியாதவர்களால் அடித்துச் சேதமாக்கப்பட்டன.

நேற்றுக்காலை 8 மணியளவில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் மீது இனந்தெரியாதவர்கள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியபோதிலும் அது வெடிக்கவில்லை. அது போன்று நேற்று மாலை 6.45 மணியளவில் யாழ். அரசடிச் சந்தியிலுள்ள இராணுவக் காவலரண் மீது கைக்குண்டு வீசப்பட்ட போதிலும் அதுவும் வெடிக்கவில்லை.

இதேவேளை, நேற்று கள்ள வாக்குகள் அளிப்பதற்குச் சென்றவர்கள் மீது இளைஞர்கள் மேற்கொண்ட தாக் குதலில் 15இற்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர். இவர்களில் சிலர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்.குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற தேர்தலின்போது ஆங்காங்கே சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், வாக்களிப்பு நிலையங்களிலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பாலேயே நிகழ்ந்ததாலும், இச்சம்பவங்கள் தொடர்பாக எவரும் முறைப்பாடுகளைத் தெரிவிக்காததாலும் யாழ்ப்பாணத்தில் மறுவாக்குப் பதிவு நடத்த வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லையென யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்தார்.

## ஓமந்தை...

சாவடிக்கு முன்பாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் உருவப்படங்களையும் நூற்றுக் கணக்கான வாக்காளர்கள் அட்டைகளையும் இவர்கள் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதன்போது சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் அங்கு காணப்பட்டதுடன், புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் பொதுமக்களிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பியதற்கு- காலம் காலமாகத் தம்மை ஏமாற்றிய சிங்களத் தலைமைகளுக்கு இதுவே தமது பதில் என்று தெரிவித்ததாகவும் செய்திகள் தெரிவித்தன. (03)

# ஜனாதிபதித் தேர்தல் 2005

## மாவட்ட ரீதியான தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்!

| | | |
|---|---|---|
| **இரத்தினபுரி** | | |
| மஹிந்த | - 6697 | - 63.48% |
| ரணில் | - 3800 | - 36.02% |
| மொத்த வாக்குகள் | -10692 | |
| செல்லுபடியானவை | -10500 | |
| **யாழ்ப்பாணம்** | | |
| மஹிந்த | - 327 | - 13.35% |
| ரணில் | - 1405 | - 74.54% |
| மொத்த வாக்குகள் | - 2326 | |
| செல்லுபடியானவை | -1885 | |
| **அம்பாந்தோட்டை** | | |
| மஹிந்த | - 6918 | - 72.13% |
| ரணில் | - 2640 | - 27.53% |
| மொத்த வாக்குகள் | - 9675 | |
| செல்லுபடியானவை | - 9591 | |
| **வன்னி** | | |
| மஹிந்த | - 1356 | - 37.27% |
| ரணில் | - 2234 | - 61.41% |
| மொத்த வாக்குகள் | - 3717 | |
| செல்லுபடியானவை | - 3638 | |
| **மாத்தறை** | | |
| மஹிந்த | - 10021 | - 70.54% |
| ரணில் | - 4128 | - 29.06% |
| மொத்த வாக்குகள் | -14304 | |
| செல்லுபடியானவை | -14207 | |
| **மொனராகலை** | | |
| மஹிந்த | - 5790 | - 63.62% |
| ரணில் | - 3270 | - 35.93% |
| மொத்த வாக்குகள் | - 9218 | |
| செல்லுபடியானவை | - 9101 | |
| **கொழும்பு** | | |
| மஹிந்த | - 10901 | - 63.58% |
| ரணில் | - 6143 | - 35.83% |
| மொத்த வாக்குகள் | -17484 | |
| செல்லுபடியானவை | -17144 | |
| **மாத்தளை** | | |
| மஹிந்த | - 6547 | - 62.39% |
| ரணில் | - 3910 | - 37.26% |
| மொத்த வாக்குகள் | -10639 | |
| செல்லுபடியானவை | -10493 | |
| **பொலனறுவ** | | |
| மஹிந்த | - 5000 | - 63.52% |
| ரணில் | - 2839 | - 36.06% |
| மொத்த வாக்குகள் | - 8000 | |
| செல்லுபடியானவை | - 7872 | |
| **கம்பஹா** | | |
| மஹிந்த | - 17131 | - 65.68% |
| ரணில் | - 8819 | - 33.81% |
| மொத்த வாக்குகள் | - 26511 | |
| செல்லுபடியானவை | - 26084 | |
| **திருகோணமலை** | | |
| மஹிந்த | - 4621 | - 53.54% |
| ரணில் | - 3913 | - 45.34% |
| மொத்த வாக்குகள் | - 8821 | |
| செல்லுபடியானவை | - 8631 | |
| **புத்தளம்** | | |
| மஹிந்த | - 4363 | - 59.61% |
| ரணில் | - 2916 | - 39.84% |
| மொத்த வாக்குகள் | - 7428 | |
| செல்லுபடியானவை | - 7319 | |
| **பதுளை** | | |
| மஹிந்த | - 10624 | - 60.64% |
| ரணில் | - 6822 | - 38.94% |
| மொத்த வாக்குகள் | -17763 | |
| செல்லுபடியானவை | -17519 | |

# தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகள்

| | | |
|---|---|---|
| **யாழ்ப்பாணம் - பருத்தித்துறை** | | |
| மஹிந்த | - 09 | - 25.71% |
| ரணில் | - 25 | - 71.41% |
| மொத்த வாக்குகள் | - 39 | |
| செல்லுபடியானவை | - 35 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -47188 | |
| **யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை** | | |
| மஹிந்த | - 139 | - 52.85% |
| ரணில் | - 98 | - 37.26% |
| மொத்த வாக்குகள் | - 276 | |
| செல்லுபடியானவை | - 263 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -52986 | |
| **யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை** | | |
| மஹிந்த | - 53 | - 20.15% |
| ரணில் | -191 | - 72.62% |
| மொத்த வாக்குகள் | - 278 | |
| செல்லுபடியானவை | - 263 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -62781 | |
| **யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை** | | |
| மஹிந்த | - 97 | - 37.31% |
| ரணில் | - 148 | - 56.92 |
| மொத்த வாக்குகள் | - 267 | |
| செல்லுபடியானவை | - 260 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -67133 | |
| **யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி** | | |
| மஹிந்த | -11 | - 17.19% |
| ரணில் | - 52 | - 81.25% |
| மொத்த வாக்குகள் | -65 | |
| செல்லுபடியானவை | - 64 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -55499 | |
| **யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணம்** | | |
| மஹிந்த | - 124 | |
| ரணில் | - 301 | |
| மொத்த வாக்குகள் | -455 | |
| செல்லுபடியானவை | - 438 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -62089 | |
| **யாழ்ப்பாணம் - கிளிநொச்சி** | | |
| மஹிந்த | - 00 | |
| ரணில் | - 01 | |
| மொத்த வாக்குகள் | - 01 | |
| செல்லுபடியானவை | - 01 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -89454 | |
| **யாழ்ப்பாணம் - கோப்பாய்** | | |
| மஹிந்த | - 54 | - 14.92% |
| ரணில் | - 267 | - 73.76% |
| மொத்த வாக்குகள் | - 388 | |
| செல்லுபடியானவை | - 362 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -63752 | |
| **மாத்தறை - கம்புறுப்பிட்டிய** | | |
| மஹிந்த | - 37641 | - 64.63% |
| ரணில் | - 19771 | - 33.95% |
| மொத்த வாக்குகள் | - 58695 | |
| செல்லுபடியானவை | - 58237 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -75953 | |
| **மாத்தறை - கக்மன** | | |
| மஹிந்த | - 40567 | - 63.27% |
| ரணில் | - 22366 | - 34.88% |
| மொத்த வாக்குகள் | - 64689 | |
| செல்லுபடியானவை | - 64118 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -82128 | |
| **மாத்தறை - தெவிநுவர** | | |
| மஹிந்த | - 35319 | - 63.81% |
| ரணில் | - 19288 | - 34.84% |
| மொத்த வாக்குகள் | - 55769 | |
| செல்லுபடியானவை | - 55354 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -73005 | |
| **கொழும்பு - கொழும்பு மேற்கு** | | |
| மஹிந்த | - 5104 | - 19.73% |
| ரணில் | - 20475 | - 79.16% |
| மொத்த வாக்குகள் | - 26264 | |
| செல்லுபடியானவை | - 25865 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -38621. | |
| **கொழும்பு - பொரள** | | |
| மஹிந்த | - 15644 | - 37.42% |
| ரணில் | - 25784 | - 61.67% |
| மொத்த வாக்குகள் | - 42262 | |
| செல்லுபடியானவை | - 41809 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -60678 | |
| **கொழும்பு - மொரட்டுவ** | | |
| மஹிந்த | - 48047 | - 52.17% |
| ரணில் | - 43207 | - 46.92% |
| மொத்த வாக்குகள் | - 93064 | |
| செல்லுபடியானவை | - 92089 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -115759 | |
| **கொழும்பு - கொழும்பு கிழக்கு** | | |
| மஹிந்த | - 16919 | - 36.62% |
| ரணில் | - 28832 | - 62.40% |
| மொத்த வாக்குகள் | - 46900 | |
| செல்லுபடியானவை | - 46206 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -65732 | |
| **கொழும்பு - மகரகம** | | |
| மஹிந்த | - 53681 | - 59.37% |
| ரணில் | - 36093 | - 39.91% |
| மொத்த வாக்குகள் | - 91335 | |
| செல்லுபடியானவை | - 90425 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -119137 | |
| **கொழும்பு - தெகிவளை** | | |
| மஹிந்த | - 18005 | - 41.80% |
| ரணில் | - 24660 | - 57.25% |
| மொத்த வாக்குகள் | - 43446 | |
| செல்லுபடியானவை | - 43077 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -58728 | |
| **கொழும்பு - கொழும்பு மத்தி** | | |
| மஹிந்த | - 2395 | - 20.31% |
| ரணில் | - 78908 | - 78.57% |
| மொத்த வாக்குகள் | - | |
| செல்லுபடியானவை | - | |
| பதிவுசெய்யப்பட்டவை | - | |
| **அம்பாந்தோட்டை - பெலியத்த** | | |
| மஹிந்த | - 36615 | - 64.56% |
| ரணில் | - 19290 | - 34.01% |
| மொத்த வாக்குகள் | - 57075 | |
| செல்லுபடியானவை | - 56713 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -72862 | |
| **அம்பாந்தோட்டை - முல்கிரிகல** | | |
| மஹிந்த | - 42897 | - 62.36% |
| ரணில் | - 24784 | - 36.03% |
| மொத்த வாக்குகள் | - 69434 | |
| செல்லுபடியானவை | - 68789 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -89528 | |
| **இரத்னபுரி- எகலியகொட** | | |
| மஹிந்த | - 37243 | - 55.34% |
| ரணில் | - 29255 | - 43.47% |
| மொத்த வாக்குகள் | - 67804 | |
| செல்லுபடியானவை | - 67302 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -83705 | |
| **இரத்னபுரி- பலாங்கொட** | | |
| மஹிந்த | - 35410 | - 50.17% |
| ரணில் | - 34049 | - 48.24% |
| மொத்த வாக்குகள் | - 71423 | |
| செல்லுபடியானவை | - 70587 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -87938 | |
| **அனுராதபுரம்- ஹொரவபொத்தானை** | | |
| மஹிந்த | - 26330 | - 53.72% |
| ரணில் | - 22027 | - 44.94% |
| மொத்த வாக்குகள் | - 68066 | |
| செல்லுபடியானவை | - 49011 | |
| பதிவுசெய்யப்பட்டவை | -83705 | |
| **அனுராதபுரம்- மிகிந்தல** | | |
| மஹிந்த | - 22456 | - 56.24% |
| ரணில் | - 16897 | - 42.32% |
| மொத்த வாக்குகள் | - 40354 | |
| செல்லுபடியானவை | - 39925 | |
| பதிவுசெய்யப்பட்டவை | - 54554 | |
| **மட்டக்களப்பு - பாண்டிருப்பு** | | |
| மஹிந்த | - 905 | - 3.55% |
| ரணில் | - 24142 | - 94.72% |
| மொத்த வாக்குகள் | - 25736 | |
| செல்லுபடியானவை | - 25489 | |
| பதிவுசெய்யப்பட்டவை | - 79379 | |
| **காலி - ரத்தோட்ட** | | |
| மஹிந்த | - 22456 | - 56.24% |
| ரணில் | - 16897 | - 42.32% |
| மொத்த வாக்குகள் | - 40354 | |
| செல்லுபடியானவை | - 39925 | |
| பதிவுசெய்யப்பட்டவை | - 54554 | |

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.